# திராவிடநாடு

10—1—60 | வார வெளியீடு | விலை 16 காசு


# போவோம்! காண்போம்!

—[தொல்காப்பியன்]—

******

பூத்துவருந் திராவிடத்தைப் புகழ்மணக்க நாமமைத்துக்
காத்துவரத் தூக்கவேண்டும் தோளை!—நல்ல
கண்ணியத்தைக் கடமைதனைக் கட்டுப்பாடென்பதனைப்
பின்னிவைத்த அறப்போராம் வாளை—ஏந்தி
நாட்டிற்கு விடுதலையை நாம்கொடுக்க வேண்டுமென்று
வீட்டிற்கு வீடுஒவ்வோர் காளை—வரப்
பொல்லாத பகையிங்கு பொடிப்பொடியாய் ஆகிப்பதில்
சொல்லாமல் ஓடிவிடும் நாளை!
தூங்குவதைப் போலிருந்து துடிதுடித்து எழுந்துவரும்
வேங்கையாய் நாமெல்லாம் ஆவோம்!—உயர்
திராவிடமும், தமிழ்மொழியும் தாழ்வதனைப் பார்த்துவெறும்
வாய்மொழியை மாத்திரமா ஈவோம்?—மிகத்
தீங்குசெய்யும் வடக்கிருந்து தென்னகத்தைத் தான்பிரித்து
வாங்குதற்குப் பணிபுரியப் போவோம்!—பகை
போய்ப்பறக்கத் தொண்டுசெய்து பூத்துவிட்ட திராவிடத்துத்
தனியரசை மகிழ்ச்சியோடு காண்போம்!

# எங்களைப் பார்!

—(ப. கோதண்டராமன்)—

**சமுதாயமே எங்களைப்பார்!**

வற்றாத ஆறும் வளமுடைசோலையும் சொத்தாக உடைய செந்தமிழ் நாட்டின் தெரு ஓரங்களிலே—நடைபாதைகளிலே நாதியற்றவர்களாய் நாயினும் கேவலமாய்க் காலம் தள்ளி வரும் எங்களைப்பார்!

நாங்களிருக்குமிடம் நடைபாதை, தெரு ஓரம், மரத்தடி—சந்துகள், சாக்கடை ஓரங்கள்! நாளெல்லாம் வெயிலில் காய்ந்து, மழையில் நனைந்து, பனியில் நடுங்கி பரிதவிக்கிறோம். ஓட்டைப் பானைக்ள்—அதன் மறைவிலே எங்கள் வாசம். எலும்பும் தோலுமாய் ஓட்டைகள் நிறைந்த ஒரு முழக் கந்தலாடையுடன் காட்சியளிக்கும் எங்கள் குழந்தைகள்—'நாட்டின் செல்வங்கள்; எதிர்கால மன்னர்கள்' எனப் படுவோர்கள்! குளிரால் கையது கொண்டு மெய்யது தழுவி காலைக் கதிரவன் எழுந்தும் தானெழாது படுத்துறங்கும் பச்சிளங்குழந்தைகள்! இன்றோ—நாளையோ என இறப்பிற்காகக் காத்திருக்கும் முதியவர்கள். எங்கள்உறவினர்கள் போலவே கூடவிருந்து குலவிடும் கொசுக்கள்—ஈக்கள், சொறி நாய்கள். இது நாங்களிருக்கும் சூழ்நிலை.

எங்கள் இருப்பிடத்தின் இருமருங்கும் விண்ணை முட்டும் மாளிகைகள் ஏராளம்! ஏராளம்! கண்ணாடி சன்னல்கள் —அவை தூசு படாமல் மறைக்க வண்ண முடை சால்லாத் துணிகள்! பல வகை வளைவுகள்; வண்ணப்பூச்சு! வண்ண ஒளி விசும் மின் விளக்குகள். கண்ணைப் பறிக்கும் கவர்ச்சி.

அங்கே காற்று வாங்கப் பரந்த இடம்; வெப்பதட்பத்தை மாற்றியமைக்கத் தக்க அறைகள். குளிக்கும் அறைகள்; அங்கே வெந்நீரும் தண்ணீரும். உண்ண அறுசுவை உண்டு! உடுக்கஉயர்ந்தஆடைகள். இசை கேட்க வானொலி! படுத்துறங்கப்பஞ்சணை! புசிக்கப் பழங்கள்—பருகப் பலவகை பானங்கள்! எடுபடிக்கு ஏராள ஆட்கள்! அங்கு இருக்கும் நாய்க்குக்கூட வசதிகளைச் செய்துகொடுக்க மனம் உண்டு—தனம் உண்டு! இன்னும் இன்பம் அனுபவிக்க எத்தனையுண்டோ அத்தனையும் உண்டு அங்கே!

எங்கள் ஓரத்தே வழவழப்பான தார்ச்சாலைகள்! அதிலே ஓயாது ஒழியாது ஓடிக்கொண்டே இருக்கும் பலநிறக் கார்கள்! அவற்றிலே பல கொடிகளைத் தாங்கிச்செல்லும். மாலைகளைச் சுமந்து செல்லும்! நாயைக்கூட ஏறிச் செல்லும்!

இங்கே வாருங்கள்! எங்களைப் பாருங்கள்! நாளெல்லாம் மாடிழுக்கும் வண்டியைத்தானிழுத்துக் கால்வயிறு கஞ்சிக்கும் வழியின்றிக் காயும் நிலை! சிறுவர்கள்—"ஓட்டைப் பானையிலே ஒட்டிக்கொண்டு ஒரு பருக்கை இருக்காதா" என்று கைவிட்டுத் துழாவிக் காணப் பெறாது கண்கலங்கி, பார்வையைத் திருப்ப — அங்கே — தரையிலே எறும்பு இழுத்துக்கொண்டு செல்லும் பருக்கையை எடுக்கச் செல்ல, சொறிநாய் நா நீட்ட—கையிலெடுத்து வாயில் வைக்கும் நிலை! அதைப் பார்த்து "எங்களுக்கு ஏன் பிறந்தாய்" என நினைக்கும் தாயும் தந்தையும்! இம்மட்டோ? ஐயகோ! நாங்கள் வயிறு வளர்க்கப்படும்பாடு!

மாளிகைகளை உருவாக்கினோம்—மேட்டுக் குடியினர் உலவிட! அங்கே ஆடல், பாடல், கேளிக்கைகள் அத்தனையும்! பூங்காக்களை உருவாக்கினோம்—அங்கே பூமான்களும் பூவையர்களும் பூரிக்க! தார்ச் சாலைகளை உருவாக்கினோம்—தனவான்கள் காரில் குதூலமாக குலுங்காமல் செல்ல! காடுகளை அழித்துக் கழனிகளை உருவாக்கினோம். அங்கே செந்நெல் விளையச் சீர்செய்தோம்—பெரு நிலக்கிழார்கள் பேரின்பமடைய!

சமுதாயமே! வளம் ஒருபுறம்! வறுமை மறுபுறமா? வாழ்வு ஒருபுறம்! தாழ்வு மறுபுறமா? வளர்ச்சி கண்டு நாங்கள் கிளர்ச்சி செய்யவில்லை. ஆனால் நாங்கள் கேட்பதெல்லாம் எங்களுக்கு வாழ்வு, வாழ வசதி!

நாங்களும் வாழவேண்டும்; வளம் பெறவேண்டும். இதற்குச் சமூகம் வகை செய்யவேண்டும். நாங்கள் நடைபாதையினராம் எத்தனை நாளைக்கு இடமின்றி இடர்பட்டு வாழ்வது? நாங்களும் உங்கள் சகோதரர்கள் தாமே! தோழர்களே! எங்களைப் பாருங்கள்! எங்கள் துயர் துடையுங்கள். நடைபாதையினருக்கு நல்வாழ்வு அளித்தவர் ஆவீர்கள்! உங்களை நாடு போற்றும்! நல்ல ஏடு போற்றும்!

★

# பொங்கல் மலர்

## முக்கிய அறிவிப்பு

மலர் எவ்வளவு தேவை என்பதை 28—12—59க்குள் அறிவிக்கும்படி கேட்டிருந்தோம். எனவே இன்று வரை கிடைத்த கணக்கின்படி மலர் போடப்படுகிறதாகையால், இனிமேல் வரும் ஆர்டர்கள் கவனிக்கப்பட்மாட்டாதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

31—12—59

பொறுப்பாளர்
"திராவிட நாடு"

ர் 1[illegible] ஆண்டுச் சந்தா ரூ. 8. (10-1-60) தனிப் பிரதி 16-காசு இதழ் 26

# ஒழுங்கீனம் ஒழிய..!

காங்கிரசுக் கட்சியினர் ஆளும் பொறுப்பை என்று ஏற்றார்களோ, அன்றே அவர்களில் பலரிடம் இருந்துவந்த — அல்லது இருப்பதாகக் காட்டிக் கொள்ளப்பட்ட ஒழுங்கு, நேர்மை, நாணயம் எல்லாமே அவர்களிடமிருந்து விடைபெற்றுக்கொண்டுவிட்ட தென்பதை நாம் அன்றுமுதல் — அவர்கள் பதவி ஏற்றகாலம் முதல் பேசியும் எழுதியும் வந்திருக்கிறோம்.

ஆதாரங்களை எடுத்துக்காட்டி இன்னின்ன வகையில்—துறையில் இன்னின்ன தவறுகளை, ஒழுங்கீனவாறே, நாணயக்குறைவான செயல்களைக் குறிப்பாகக் காங்கிரஸ்காரர்கள், சிறப்பாகப் பதவியில் இருக்கும் காங்கிரஸ்காரர்கள் செய்துவருகிறார்கள். இவர்களைக் கேட்பாரில்லையா? இவர்கள் புரியும் அடாத செயல்களைக் கவனித்துக் கண்டிப்பாரில்லையா? திருத்துவார் இல்லையா என்றெல்லாம் கேட்டுவருகிறோம்.

ஓ! இவர்களா? இவர்கள் எதிர்க்கட்சியினராயிற்றே! காங்கிரசை, காங்கிரசுக்காரர்களை, ஆளும் பொறுப்பிலிருப்பில் இருப்பவர்களைத் திட்டுவதும் அவர்கள்மீது குறைகண்டு குற்றம் சுமத்துவதும் தானே இவர்களது நோக்கம்—இலட்சியம்; என்றெல்லாம் காங்கிரஸ் நண்பர்கள் கூறத் தவறுவதில்லை. ஆளும் பொறுப்பில் இருக்கும் காங்கிரஸ் தலைவர்களும், எதிர்க்கட்சியினர் கூறும் குற்றச்சாட்டுகள் எவ்வளவு உண்மையானவையாக இருந்தாலும் அவற்றிற்குச் செவிசாய்த்து—மதிப்பளித்து மாற்றம் காண விரும்புவதில்லை. மாறாக எதிர்க்கட்சியினர் மீதே எரிந்து விழுந்து அவர்களின் வாயை அடக்குவதில் தங்களின் முழுப் பலத்தையும் பயன்படுத்தத் தவறுவதில்லை.

நாமோ ஆளும் கட்சி! இவர்களோ ஆளப்பட வேண்டிய கட்சிகளைச் சேர்ந்தவர்கள்—நமக்கு அடங்கி நடக்கவேண்டியவர்கள். இப்படிப்பட்ட இவர்கள் நம்மீது — அதிகாரத்தில் இருக்கும் நம்மீது குறைகண்டு, ஒழுங்கீனங்களைக் காட்டி, நாணயமற்று நடப்பதாகக் கூறிக் குற்றம் சுமத்துவதா? அதை நாங்கள் மதித்து நடப்பதா? அப்படி நடக்க ஆரம்பித்தால் நம்முடைய மதிப்பும் புகழும், செல்வாக்கும் சீரும் சிறப்பும் என்னாவது என்ற போக்கில் நடந்து வருவதையும் நாம் அன்றாடம் கவனித்துக்கொண்டுதான் வருகிறோம்.

தட்டிக்கேட்க ஆளில்லை; எனவே தம்பி சண்டப் பிரசண்டனாகிவிட்டான் என்பதற்கொப்ப நமது காங்கிரஸ் நண்பர்களும் அவர்களது அணைப்பிலும் ஆதரவிலும் பதவியிலிருக்கும் காங்கிரசுத் தலைவர்களும் எந்த அளவுக்கு ஒழுங்கீனமாக நடக்கமுடியுமோ அந்த அளவுக்குத் தலைகால் தெரியாமல் நடந்துவருவதற்கு ஓர் முற்றுப்புள்ளி காணும்நிலை ஏற்படாதா என்று எண்ணிக்கொண்டிருந்த நமக்கு இப்போது ஒருசெய்தி கிடைத்துள்ளது.

**“உயர் பதவியிலுள்ள காங்கிரசுக்காரர்களிடம் இருக்கும் ஒழுங்கீனங்களை விசாரிக்க ஒருகமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது.”**

டில்லியில் நடைபெற்ற காங்கிரஸ் பார்லிமெண்டரிக் கட்சியினரால் தெரிவிக்கப்பட்ட யோசனையாகக் காங்கிரஸ் காரியக்கமிட்டி ஏற்று, அதனை விசாரிக்க ஐவர் கொண்ட ஒரு கமிட்டியையும் நியமித்திருக்கிறது.

உயர்பதவியிலிருக்கும் காங்கிரஸ்காரர்கள் மீதுள்ள ஒழுங்கீனங்களை விசாரிக்க, உயர்பதவியிலிருக்கும் காங்கிரஸ்காரர்களில் ஐவரைக் கமிட்டி மெம்பர்களாகக் காரியக் கமிட்டி நியமித்ததைப்பற்றி இங்கு நாம் எதுவும் குறிப்பிடத் தேவையில்லை. ஏனெனில், அந்த ஐவரும் இப்போது நீதிபதிகளாக—ஒழுங்கீனங்களை விசாரிக்கும் உன்னதமான இடத்தில் அமர்த்தப்பட்டவர்களாக ஆகிவிட்டதால், இதர உயர்பதவிக் காங்கிரஸ்காரர்களிடம் காணப்படும் ஒழுங்கீனங்களை உள்ளபடி எடுத்தாராய்ந்து, அப்படிப்பட்டவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கவும், இனியும் அவ்விதமான ஒழுங்கீனங்கள் நிகழாமல் பார்த்துக் கொள்ளவுமான சிபார்சுகளை இந்த ஐவரும் காங்கிரஸ் காரியக் கமிட்டி முன்வைத்துத் தக்க பரிகாரம் காண முயலவேண்டுமென்பதுதான் நம்முடைய விருப்பம்.

அதிகார வர்க்கத்தினரிடம் ஒழுங்கீனங்கள் இல்லாமல் இருக்கவேண்டுமென்ற எமது நீண்ட நாளைய அவா இதன்மூலம் தீர்க்கப்பட வேண்டுமென்பதே நம்முடைய வேண்டுகோளாகும்.

எனவே, வேலியே பயிரை மேயாது பார்த்துக் கொள்ளவேண்டுமே!

முடிவு எப்படி எடுக்கப்படுகிறதென்பதைப் பொறுத்திருந்துதான் பார்ப்போமே!!

# ஏர்க்களமும் போர்க்களமும்!

……………………[தமிழவேள்]……………………

வானத்திலே மேகக் கூட்டங்கள் குழுமுகின்றன. மின்னல் தோன்றுகிறது. சிறிது நேரத்திற்கெல்லாம் இடி முழக்கம் கேட்கின்றது. இடியோசை கேட்ட நாகங்கள் தங்கள் புற்றுக்குள் இருந்தபடியே அஞ்சி நடுங்குகின்றன. பெருங்காற்றுச் சுழன்று அடிக்கின்றது. மழையால் நிலம் ஈரமாகிறது,

உழவன் ஏருடன் சென்று தன் நிலத்தை உழுது வைக்கிறான். பின்னர் ஒரு நாள் விதைகளைக் கொண்டு சென்று விதைக்கிறான். விதைகள் முளைத்து வளர்ந்து பயிராகின்றன. பயிர்கள் கதிர்கள் ஈனுகின்றன. கதிர்மணிகள் அடித்துப் புடைத்துக் குவிக்கப்படுகின்றன. நெற்போர் அழகுறப் பொலிகின்றது. அதன் அருகே உழவன் உவகை நிறைந்த உள்ளத்தோடு இருந்து தன்னுடன் உழைத்த வினையாளர்களுக்கும் தன்னை விரும்பி வருவோர்க்கும் நெல்லை வாரி வழங்குகிறான். இது ஏர்க்களத்தே காணக் கூடிய எழிற் காட்சியாகும்.

இவ்வேர்க்களக் காட்சியோடு ஒரு போர்க்களக் காட்சியை அழகாக ஒப்பிட்டுக் காட்டுகிறார்பரணர் என்னும் புலவர், புறநானூற்றுப் பாடல் ஒன்றில்.

கரிய பெரிய யானைக்கூட்டங்கள் மேகங்களைப் போன்று குழுமியுள்ளன. வீரர்கள் ஒருவர்மேல் ஒருவர் எறிவதற்காக உயர்த்தும் வாட்கள் மின்னலைப்போன்று ஒளி விடுகின்றன. முழங்குகின்ற போர் முரசம் இடிமுழக்கம் போன்றுள்ளது,பகையரசர் தம் பாசறையிலிருந்தபடியே போர் முரசு கேட்டு இடியொலி கேட்ட நாகமென அஞ்சுகின்றனர். குதிரைப்படைகள் பெருங்காற்று வீசுவதுபோல் விரைந்து போரிடுகின்றன. மறவர்களின் விற்களினின்றும் புறப்பட்டு வரும் அம்புகள் மழைத்துளிகளைப் போன்று எண்ணிறந்த அளவில் விழுகின்றன. போரில் மடிவோரின் உடல்களினின்று ஒழுகும் செந்நீரால் நிலம் சிவப்பாகிறது.

அரசன் தன் தேரில் ஏறிப் போர்களத்தே செல்வது ஓர் உழவன் ஏரால் நிலத்தை உழுவது போன்று உள்ளது. படைக்கருவிகளான வில், அம்பு, வேல், வாள் முதலியன ஒடிந்து விழுந்து விதைகளைப்போன்று நிலத்திலே ஊன்றி விடுகின்றன. பிணங்களாக விழும் மறவர்கள் யானைகள்,குதிரைகளின் தலைகள், கதிர்கள் முற்றி விளைந்த பயிர்களைப் போன்று சாய்ந்து கிடக்கின்றன.

போர்க்களத்தே இறந்து குவியும் பிணங்கள் நெற்களத்தே விளங்கும் நெற்போர்களைப் போன்றுள்ளன. அப்பிணங்களை இழுத்துச் செல்லும் நரிகளும் கழுகுகளும் உழவன் வாரி வழங்க நெல்லை எடுத்துச் செல்லும் வினையாளர்களையும் பரிசிலர்களையும் ஒப்பத் தோன்றுகின்றன. போர்க்களத்துக்கு அருகிலேயே பாசறை அமைத்து அரசன் வெற்றிக் களிப்புடன் இருப்பது நெற்களத்தே உழவன் உவகையோடு இருப்பதைப்போன்று உள்ளது.

இங்ஙனம் போர்களத்தை ஏர்க்களத்தோடு ஒப்பிட்டு, அரசனை உழவனோடு ஒப்ப வைத்துப் பாடுகிறார் புலவர். பாடப்பட்ட மன்னன் சேரமான் கடலோட்டிய வேல் குழுகுட்டுவன் என்னும் பெருவேந்தன். பேரரசன் ஒருவனைச் சாதாரண உழவனொடு ஒப்பிட்டுப் பாடுவது என்றால், அப்பாட்டைக் கேட்டு மன்னன் மகிழ்வது என்றால், ஏர்க்களத்துக்கு—உழவுத்தொழிலுக்கு அக்காலத் தமிழகத்தில் எத்தகைய சிறப்பு இருந்திருக்க வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பண்டைத் தமிழ் இலக்கியங்கள் அனைத்துள்ளும் ஏர்த்தொழில் உயர்வாகவே போற்றப்பட்டுள்ளது.

புறநானூற்றிலேயே மற்றொரு பாடல். சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்னும் மன்னனைக் குறுங்கோழியூர் கிழார் பாடியது. அப்பாடலில் புலவர் அரசனை நோக்கிக் கூறுகிறார். "அரசே! உன்னுடைய நாட்டு மக்கள் சோறு ஆக்கும் தீயாகிய வெம்மையோடு ஞாயிற்றினுடைய வெம்மையை அன்றி வேறு வெம்மையை — தேறலை— அறியமாட்டார்கள். வானத்தே எழிலுறத் தோன்றும் வானவில்லையன்றிக் கொலைத் தொழில் புரியும் மறவர்வில்லை அறியமாட்டார்கள். ஏராகிய படைக்கலத்தையன்றி போர்வினைக் கலங்களை அறியமாட்டார்கள்," என்றார்.

பெரிதும் பண்புகளைப்பற்றியே அதிகாரம் வகுத்துள்ள திருவள்ளுவர் "உழவு" என்று தொழிலைப் பற்றி ஒரு அதிகாரத்தை வகுத்திருக்கிறார். அதில் முதற் குறளிலேயே "உலகம் பல தொழில்களைச் செய்து உழன்றாலும் ஏர்த் தொழிலின் பின்னேதான் நிற்கிறது. எனவே உழவைவிடச் சிறந்த தொழில் வேறில்லை" என்கிறார். மேலும் பல இடங்களில் உழவின் உயர்வைக் குறிப்பாகக் கூறிச் செல்கிறார் திருவள்ளுவர். ஒரு மறவனைக் குறிப்பிட நேர்ந்த போது அவனை "வில்லேர் உழவன்" (வில்லை ஏராக உடைய உழவன்) என்று குறிப்பிடுகிறார். அங்ஙனமே புலவனை "சொல்லேர் உழவன்" — சொல்லை ஏராக உடைய உழவன்—என்று சொல்கிறார். செங்கோன்மை என்னும் அதிகாரத்தில், கொடியவர்களை அரசன் கொலைத் தண்டம் விதித்துத் தண்டிப்பது உழவன் தன் பயிருக்குத் தீங்கு விளைக்கும் களைகளைக் களைந்தெறிவதற்கு ஒப்பான செயலாகும் என்று கூறுகிறார்.

பத்துப்பாட்டில் ஒன்றான மலைப் படுகடாம் என்னும் பாட்டில் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் என்னும் புலவர் "இசை நுவல் வித்தின் நசை ஏர் உழவர்" என்று பரிசிலர்களைக் குறிப்பிடுகிறார். அஃதாவது தாம் பிறரைப் புகழ்ந்துரைத்தலாகிய வித்தையும் அவர்கள் தமக்குப் பொருள் கொடுக்கவேண்டும் என்று விரும்புதலான ஏரையும் உடைய உழவர்கள் என்கிறார்.

இன்னும் சீவக சிந்தாமணியில் அதன் ஆசிரியர் வேல் வீரர்களை அயில் உழவர்கள் என்றும், வாள் வீரர்களை வாள் உழவர்கள் என்றும் குறிப்பிடுகிறார்.

இவ்வாறெல்லாம் அரசர்களையும் புலவர்களையும், பரிசிலர்களையும் வீரர்களையும், உழவர்களாகக் கண்ட ஒரு காலம் தமிழகத்தே இருந்திருக்கிறது. உழவன் என்று கூறிக்கொள்வதில் ஒவ்வொருவரும் பெருமைப்பட்டிருக்கிறார்கள், போர்க்களத்தை விட ஏர்க்களமே பெரிதும் போற்றப்பட்டு வந்திருக்கிறது. அந்தக்கால நிலையைக் கொண்டு அதற்கு முன்னால் இருந்த காலத்தை நோக்கின் போர்க்களம் என்பதே இன்றி ஏர்க்களம் மட்டுமே விளங்கிய காலம் ஒன்று தமிழகத்தில் இருந்திருக்க வேண்டும் என்பது நன்குபுலப்படும்.

❋

# வடக்கு பெறும் வெள்காணி!

—(கிருட்டினன்)—

இனத்தாலும், மொழியாலும், காலாச்சாரத்தாலும் ஒன்றுபட்ட —திராவிடத்தின் விடுதலைக்காக— திராவிடத்தின் தனியரசுக்காகப் பாடுபடும் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து, விடுதலையே தன் கொள்கையென வீரமுழக்கமிடும் வீர மரபினரைப் பார்த்து, இவர்களெல்லாம் நாட்டைத் துண்டாட நினைப்பவர்கள் — பாரத மாதாவைப் பங்குபோட எண்ணுபவர்கள் என்றும், இவர்கள் வாழ்வதாவது நாட்டை பிரித்துவிடுவதாவது என்றும், இங்கு கனிவளம் இல்லை, காட்டுவளம் இல்லை என்றும் பித்தலாட்டம் பேசிவரும் கனதனவான்கள் பற்றி எண்ணும் போது வெட்கமும் வேதனையும் ஏற்படாமல் இல்லை.

அவர்கள் இதை மட்டும் கூறிவிடவில்லை. திராவிடம் பிரிந்தால் அண்டை நாட்டானைத்தான் அணுகவேண்டும்; திராவிடமோ சிறியநாடு. அதை வெளிநாட்டான் கொள்ளைகொள்வான் என்று ஏக இந்தியப் பித்தர்கள் ஏதேதோ வாய்ப்பினத்தல் செய்து வருகிறார்கள்.

அவர்களுக்கு நாம் கூறுவது என்ன என்றால், ஏக இந்தியா என்று கூறுவது வரலாற்று உண்மையல்ல. அது ஏகாதிபத்தியச்சுரண்டல்காரர்களுக்குப் பயன்படும் ஓர் கருவி என்கிறோம்.

'திராவிடத்தில் வருமானம் கிடையாது, கனிவளங்கள் கிடையாது என்று கூறும் அறிவாளிகளே! சேலத்து அலுமினியம்பற்றி ஆராய்ச்சியாளர் கூறிவருவது தெரியவில்லையா? கனரகத்தொழில் ஆரம்பியுங்கள்; நெய்வேலியிலே நிலக்கரி கிடைக்கிறது என்று தி. மு. க. திட்டம் கொடுத்தது தெரியவில்லையா? சேலம், சாத்தூர், மைசூர் போன்ற இடங்களில் ஏராளமான இரும்புக் கனிவளம் இருக்கிறது; 400-ஆண்டுகளுக்கு நன்றாகத் தொழிற்சாலை நடத்தமுடியும் என்றெல்லாம் தெரியுமே! ஒரு ஆண்டுக்கு 25-டன் இரும்பு எடுக்கலாம் என்று கூறுகிறார்களே! இப்படி இருந்தும் ஏன் நடத்த முன்வரவில்லை?

புதுச்சேரியிலிருந்து கன்னியாகுமரிவரை நீண்ட தொடராக எண்ணெய்வளம் இருக்கும் என்று கருதப்பட்டு வருகிறது. படிவங்களின் தன்மையைக்கொண்டு ஆராய்கையில் இங்கு பெட்ரோலியம் கிடைக்குமென உறுதியாக நம்பப்படுகிறது.

அதுமட்டுமல்ல, பிரிட்டன் மணிமுடியில் நூற்றாண்டு காலமாகப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் அந்தக் கோகினூர் வைரமும், மாவீரன் நெப்போலியன் தன் பட்டாக்கத்தியிலே பதித்திருந்த வைரமும், பாரசீகம், ருஷ்யா, ஆஸ்திரேலியா முதலிய நாட்டு மன்னர்களின் மணிமகுடங்களில் ஒளிவீசிய வைரங்களும் நம் நாட்டு வைரங்கள்!

இந்த வைரங்கள் திராவிடத்தின் வட்டகோடியில் கோல்கொண்டா என்ற ஒரு சிறிய நாடு இருந்தது (இப்போது அந்தப் பெயரில் சிறிய ஊர்) அந்நாட்டு எல்லைக்குள் இன்றைய கிருஷ்ணா, அனந்தப்பூர் முதலிய மாவட்டப் பகுதிகள் அடங்கி இருந்தன. இப்பகுதியில் ஆலை கிடைக்கின்றன என்றும், வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள வாணியம்பாடியில் மிகச்சிறந்த இரத்தினங்கள், உயர்ந்தநவமணிகள் மிகுதியாகக் கிடைத்தனஎன்றும் வரலாற்றுக் குறிப்புக்கூறுகிறது.

இப்படிப்பட்ட பொன்னான நம் திராவிடத்தைத்தான் கனிவளம் இல்லாதநாடு எனப் புலம்பி வருகிறார்கள் ஏக இந்தியப் பித்தர்கள். "சேலத்தில் ஒரு அலுமினியத் தொழிற்சாலை துவக்கப்படுவதாகப் பேச்சு இருந்து வருகிறதே தவிர, செயலளவிலே தொழிற்சாலையைக் காணோம். கனரக மின்சார இயந்திர உற்பத்திக்கான தொழிற்சாலை நம் சென்னை மாநிலத்திலே அமையலாம் என்று கூறப்பட்டதே தவிர; கடைசி நேரத்தில் போபாலுக்குத்தான் அத்தொழிற்சாலை கிடைத்தது.

1. போபாலிலுள்ள கனரக மின்சார இயந்திரத் தொழிற்சாலையினர் தங்களுடைய சொந்த உபயோகத்திற்காக நில — நீர் வாயுவைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலையை அமைத்து வருகின்றனராம் அந்த இயந்திரம் ஒவ்வொன்றும் 6,00,000 கன அடிக்குக் குறையாத அளவில் வாயுவை உற்பத்தி செய்யும் சக்திவாய்ந்த இரண்டு பெரும் பிரிவுகளைக்கொண்டதாக இருக்குமாம். இந்த இயந்திரத்தை நிர்மாணிப்பதற்குச் சுமார் ரூ. 16·67 இலட்சம் ஆகுமாம்.

2. டெல்லிசர்க்கார் இரண்டாவதாக நிறுவவிருக்கும் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை பீகாரில் பௌரனி எனுமிடத்திற்கருகே நிறுவப்படுமாம். முதல் தொழிற்சாலை அசாமில் கௌஹாத்தி எனுமிடத்தில் நிறுவப்பட்டுள்ளது.

3. டாடா நிறுவனத்தினர், மற்றும் ஒரு பெரும் தொழிற்சாலையை வடநாட்டில் நிறுவ, டெல்லியாரிடம் அனுமதி கோரியுள்ளனர். கலப்பை மற்றும் கருவிகளுக்கான உருக்கு உற்பத்தியில் அத்தொழிற்சாலை ஈடுபடுமாம். ஆண்டொன்றுக்கு 60,000-டன் முதல் ஒரு இலட்சம் டன்வரை உருக்கு உற்பத்தியை அத்தொழிற்சாலை செய்யுமாம்.

4. இந்தியாவில் தயாரிக்கப்படும் இரயில்வே எஞ்சின்களுக்குச் சில அந்நிய நாடுகளில் இருந்து கிராக்கி கிடைத்துள்ளது. "தாய்லாந்து, பர்மா ஆகிய நாடுகள் வாங்குவதற்கான ஏற்பாடுகள் நடத்திவருகின்றனவாம் குறுகிய சமீபகாலத்தில், வடநாட்டில் இரயில் என்சின்கள் உற்பத்திக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இப்போது உற்பத்தி, ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்குப் பெருகியிருக்கிறது. ஏற்றுமதிக்கு ஏற்பாடானால் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்த வளர்ச்சி எல்லாம் வடநாட்டில் தான் என்பதை மறந்துவிடுவதற்கில்லை.

5. இந்தியாவில் சனவரி—அக்டோபர் காலத்தில் 3,38,000 மெட்ரிக் டன் செப்புக்கனி உற்பத்தியாகி இருப்பதாகவும், முந்திய ஆண்டில் இதற்குச் சமமான காலத்தில் 3,41,000 மெட்ரிக்டன் செப்புக்கனி உற்பத்தியாகியிருப்பதாகவும் நமக்குத் தெரியவருகிறது. இந்த உற்பத்தி முழுவதும் பீகார் மாநிலத்தில் சிங்பூம் மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கிறதாம்.

6. தாமோதர் பள்ளத்தாக்கு அணைக்கட்டுத் திட்டங்களில் மிகப் பெரியதானதும், நான்காவதுமான 'பஞ்சன்குன்று' அணையை டெல்லியிலே அரசோச்சும் நேரு அவர்கள் டிசம்பர் 6-ந்தேதி திறந்துவைத்திருக்கிறார். இந்த அணைத் தேக்கத்தில் 4,200 சதுர மைல் நீர்ப்பிடிப்புப் பகுதி அடங்கி இருக்கிறதாம். தேக்கத்தில் வினாடிக்கு 3,02,000 கன அடி தண்ணீர் சேருமாம். அதுவும் அதன் இணை அணைகளான திலையா, கோனார் மைதான் ஆகிய இவையெல்லாம் சேர்ந்து தாமோதர் பள்ளத்தாக்கில் வெள்ளம் ஏற்படாமல் பாதுகாக்குமாம்.

இத்தனையும் சேர்ந்து 10,44,000 ஏகர் 'சுரீப்' பயிருக்கும் 3,00,000 ஏகர் 'ரபி' பயிருக்கும் தண்ணீர் கொடுக்கும் எனவும் அறிய முடிகிறது. பஞ்சத் மின்சார நிலையம் என்று சொல்லப்படுகிற இது டி. வி. சி. மின்சார நிலையங்களில் 6-வது ஆகும். 40,000 கிலோவாட் சக்தி உள்ளதாகும். டி. வி. சி. மின்சார கிரிட்டுக்கு சுமார் 171 கிலோவாட் அனல் மின்சார சக்தியை ஆண்டுதோறும் அளிக்குமாம்.

இப்படியெல்லாம் வடநாடுதென்னாட்டைப் புறக்கணிப்பதைக்கண்டு தான் நாம் திராவிடம் பிரியவேண்டும், திறமையுடன் ஆளவேண்டும் என்று கூறுகிறோம்.

7. பிலாய் உருக்குத் தொழிற்சாலையில் 1959 அக்டோபர் மாதத்தில் 3156 டன் உருக்குக் கட்டிகள் உற்பத்திசெய்யப்பட்டிருக்கின்றன. உருக்கு உற்பத்தியில் அந்த ஆலைகளில் அக்டோபர் மாதத்தில் உற்பத்தி செய்யப்பட்ட 34,582 டன் தேனிரும்பையும் சேர்த்து மொத்தம் 2,53,544 டன் தேனிரும்பு உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றது.

பரிசிலனை மாதத்தில் பிலாயிலிருந்து வெளியே அனுப்பப்பட்ட 38,433 டன் தேனிரும்பையும் சேர்த்து அந்த மாதத்தில் மொத்தம் 2 20,334 டன் வெளியே அனுப்பப்பட்டிருக்கிறது. இதுவரையில் சுமாராக 17,600 டன் தேனிரும்பு பிலாயிலிருந்து ஏற்றுமதி மூலம் வெளியே அனுப்பப்பட்டுள்ளதாம்.

இம்மாதத்தில் 1399 டன் கோல் தார் உற்பத்தி செய்யப்பட்டது. சுமார் 2500 டன் வெளியே அனுப்பப்பட்டது. இந்த அளவைச் சேர்த்தால் 8,069 டன் கோல் தார் அனுப்பப்பட்டதாம்.

8. பிரபல ஜெர்மன் கட்டிட நிபுணர்களால் உருவாக்கப்பட்ட ரூர்கேலா நகரம் பத்து மைல் நீள ரஸ்தாவின் இருபுறங்களிலும் 21 பகுதிகள் இருக்கின்றன. அந்த ரஸ்தாதான் அந்த நகரத்தையும், உருக்குத் தொழிற்சாலையையும் இணைக்கிறது. அந்த நகரத்தின் ஒவ்வொரு பகுதியிலும் பள்ளிகள், சமுதாய நிலையங்கள், விளையாட்டு மைதானங்கள், சுகாதார நிலையங்கள், கடை வீதிகள் ஆகிய வசதிகள் அனைத்தும் ஏகமாகச் செய்யப்படுகின்றன,

அங்குள்ள சிப்பந்திகளுக்கு மொத்தம் 7,500 வீடுகள் கட்டப்பட்டுள்ளனவாம். ரஸ்தாவின் இரு பக்கங்களிலும் 22 அடி அகலமுள்ள இரு பாதைகளும் இன்னும் பல வசதிகளும் கண்கவர் காட்சிகளும் அங்கேதான் அதிகமாக உருவாகின்றன. இன்னும் அங்கு ஏற்படுத்தும் கடை வசதிகளைப் பற்றி கேட்கவேண்டிய தேவையில்லை. இப்படியெல்லாம் அங்கு ஏற்படுத்தும் வளங்கண்டு நாம் வாய் ஊறிக்கொண்டு இருக்க வேண்டிய நிலைதான் ஏற்பட்டிருக்கிறது.

ஒரு இடத்தில் ஒரு இரும்பு உருக்குத் தொழிற்சாலை பலகோடி ரூபாய் செலவில் நிறுவப்படுகிறது என்றால், இலட்சக்கணக்கான டன் உருக்கு உற்பத்தி செய்கிறது என்ற அளவுடன் அதன் முக்கியத்துவம் சுருங்கிவிடுவதில்லை. அத்தொழிற்சாலை பல ஆயிரம் பேருக்கு வேலை தரும்; புதிய நகரம் உருவாகும் என்பது மட்டுமல்ல, அத்தொழிற்சாலை „பெறக்கூடிய பெருமை! அத்தொழிற்சாலை அமைவதையொட்டி, எத்தனையோ சிறிய—நடுத்தர—பெரிய தொழிற்சாலைகளை உருவாக்கமுடியும்.

இப்படிப்பட்ட தொழிற்சாலை ரூர்கேலா நகரத்தில் அமைகிறது. அது அழைத்து வரும் வளத்தையும், எழில்மிக்க வாழ்வினையும் வடவர்தான் அனுபவிக்கப்போகிறார்கள்.

9. இலவச கட்டாய ஆரம்பக் கல்வி அளிப்பது சம்பந்தமாக ஆசிரியர் பயிற்சி வசதிகளை விரிவு படுத்துவதற்கான திட்டத்தின்கீழ் இந்திய சர்க்காரின் நிர்வாகத் துறை அங்கீகாரமானது, பின் கண்ட மாநில சர்க்கார்களுக்கு மட்டும் அனுப்பப்பட்டிருக்கிறது.

| | | |
|---|---|---|
| ஆந்திரப் பிரதேசத்துக்கு | ரூ. | 6,67,080 |
| அசாமுக்கு | ,, | 17,01,500 |
| பிகாருக்கு | ,, | 55,82,138 |
| பம்பாய்க்கு | ,, | 24,66,000 |
| மத்திய பிரதேசத்துக்கு | ,, | 49,65,050 |
| ஒரிசாவுக்கு | ,, | 28,80,000 |
| இராஜஸ்தானுக்கு | ,, | 24,05,592 |
| உத்தரப்பிரதேசத்துக்கு | ,, | 40,73,938 |
| மேற்கு வங்காளத்துக்கு | ,, | 26,67,700 |

அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏனோ நம் சென்னைக்கு மட்டும் இல்லை என்பது தெரியவில்லை.

(8-ம் பக்கம் பார்க்க)




### ஒரு நாடக அரங்கு:

பார்ப்பவர்கள் எண்ணத்தை நடிப்பவர்கள்பால் ஒன்றச் செய்ய வண்ணக் கலவைகள்கொண்டு எழுதப்பட்ட திரைச் சீலைகள். வாழ்க்கையின் உண்மைப் பாத்திரங்கள் நிகழப் போகும் நாடகத்தின் கற்பனைப் பாத்திரங்களாக அதன்முன் தோன்ற இருக்கின்றன. மனிதன் மற்றோர் மனிதனை நடிக்கும் காட்சியைக் காண மனிதர் கூட்டம்.

திரைச்சீலை உயர்கிறது. அத்துணை கண்களும் ஓரிடம் நோக்குகின்றன. உண்மை வாழ்க்கை கற்பனை வாழ்க்கையைக் காணத் தயாராகிறது.

மனிதன் மற்றோர் பாத்திரமேற்று நடிக்கிறான். அரங்கு இருண்ட சூழ்நிலையைக் காட்டுகிறது. யாழ் அழுகிறது; மற்றைய இசைக்கருவிகள் சோக மழையைப் பொழிந்து கொண்டுள்ளன. திரைச்சீலை நிகழப்போகும் கதையை முன்கூட்டி விவரிக்கிறது; வனப்பில்லா வனம்; அதில் இலைகளைப் பறிகொடுத்துத் தனித்தனியே நிற்கும் பட்டமரங்கள்; இடிந்தகேணி; பாழடைந்த கோயில்; ஒளியற்றுப்போன இருண்ட இடங்கள். கதையில் நிகழப்போகும் துயர நிகழ்ச்சியின் சோகப் பின்னணியாக நிற்கிறது திரைச்சீலை.

மனிதன் பாத்திரமேற்று மேடையில் தோன்றி நடிக்கிறான். அவனுக்குப் பின்னணியாக அமைந்தவைகள் துயரத்தை விவரித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் அம்மனிதனது சொல்லும் நடிப்புமோ மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றன! சோகத்தைச் சொல்ல வேண்டிய அவனது அங்கத்தின் அணு ஒவ்வொன்றும் மகிழ்ச்சியைப் படம் பிடித்துக் காட்டிக் கொண்டிருக்கின்றன. நாடகம் காண வந்தவர்களைத் தனது துயர நடிப்பால் கண்கலங்கச் செய்ய வேண்டியவன் தனது பாத்திரத்தையே மறந்தவனாகிறான். சோக உருவாக மாறி உணர்ச்சிகளை வெளிப்படுத்த வேண்டியவன் மகிழ்வுக்கு இலக்கணம் வகுத்துக் கொண்டிருக்கிறான்!

காட்சி நிகழ்ச்சிகளில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அரங்கத்தினுள் ஆட்டுவித்துக்கொண்டிருந்தவர்கள் அதிர்ச்சியடைகிறார்கள். காணவந்தோரிடையே வியப்பு ஏற்படுகிறது. சலசலப்பு அமைதியை அழிக்கிறது.

சோகப் பின்னணிகள் தங்கள் ஒலிகளை நிறுத்திக்கொள்கின்றன. துயரத்தைப் படம் பிடித்துக் காட்டிக்கொண்டிருந்த வண்ணத் திரைச்சீலைகள் தூக்கி மடக்கப்படுகின்றன. கற்பனை உலகில் சஞ்சரிக்க இருந்த மக்கள் வெள்ளம் உண்மை உலகுக்கு திரும்பவும் வருகிறது.

"நாடக ஒளி' மறைகிறது;' 'உண்மை ஒளி'' மறுபடியும் தோன்றுகிறது.

* * *

### இது உலக அரங்கு:

வளியும், வெளியும், நீரும் நிலமும், கொண்ட இயற்கைதான் இங்கு ஆட்டுவிக்கும் ஆசான். மானிட உருகொண்டு மண்ணில் வாழ்ந்து வருவோரெல்லாம் நிலை நடிகர்கள். நீதியும் நேர்மையும், அன்பும் பண்பும், வாய்மையும் மெய்ம்மையும் கொண்டு இயற்கையில் தீட்டப்பட்டு மனிதர்களுக்குப் பின் மாயையாகத் தொங்கிக் கொண்டிருப்பவைகள்தான் வண்ணத் திரைச்சீலைகள். மனித நாடகத்தின் தராசு முனையாம் நேர்மைதான் இந்த அரங்கின் பின்னணி இசைக்கருவி.

உலக மேடையில் நடிப்பவர்களெல்லாம் மனிதர்கள். மனிதர்களெல்லாம் நடிப்பவர்கள். இங்கு உண்மை வேறு நடிப்பு வேறல்ல; இரண்டும் ஒன்றில் ஒன்றுதான்.

நாடக அரங்கில் தெரிவது ஒளியின் ஒளி. உலக அரங்கில் தெரிவது கால ஒளி. முன்னையது முடிவுள்ளது; பின்னையது முடிவில்லாதது. நாடகத்தின் திரைச்சீலை வண்ணக் கலவைகளால் எழுதப்பட்டது. உலகத்தின் திரைச்சீலை எண்ணக்கலவைகளால் உருவானது.

நாடக இயக்கத்திலே ஒழுங்கிருக்கும். அங்கு நடக்கும் திரைச்சீலை மாற்றத்தில் சிக்கல் இருக்காது; பொருளிருக்கும். நடிகர்களின் குணாதிசயங்கள் வரையறுக்கப்பட்டிருக்கும். பாத்திர இயக்கங்களில் குழப்பமிருக்காது; குழப்பத்திலும் தெளிவிருக்கும். நாடக ஒளி பாத்திரங்களைக் கட்டுப்படுத்தும். அதன் ஒலியோ நடிகர்களின் மன ஒலியோடு ஒத்திருக்கும்.

இயக்கங்கள் ஒரு சிறிது ஒன்றை ஒன்று வழுவினாலும் கதையின் ஓட்டம் தடம் புரளும்; காட்சி நிகழ்ச்சிகளில் குழப்பம் நிகழும்; அமைதி அழியும்; நாடகம் நின்றுபடும்.

ஆனால் உலக அரங்கு அப்படியல்ல:

இயற்கை ஆசானுக்குக் கட்டுப்பட்ட நடிகர்களல்ல எல்லாமனிதர்களும். நேர்மையும், உண்மையும், ஒழுங்கும் பின்னணியாக அமைந்த உண்மைத் திரைச்சீலைக்குப் புறம்பானதாக உள்ளது பாத்திரங்களின் நடிப்பு. நீதியின் குரல் எழுப்பும் பின்னணி இசையை அலட்சியம் புரிகின்றனர் உலகின் பெரும்பாலான வாழ்க்கை நடிகர்

கள். உலக மேடையின் மேல் வீசும் கால ஒளியை மறைக்கப் பார்க்கின்றனர் சிலர்; அவ்வொளியினின்றும் மறையப் பார்க்கின்றனர் பலர்.

நேர்மையையும் வாய்மையையும் திரைச்சீலையாகக்கொண்டு மனச்சாட்சியின் அடிப்படையில் வாழ்க்கையைச் செலுத்துவோரது நடிப்பெல்லாம் உலகமேடையின் ஒரு மூலையில் ஒதுக்கப்படுகிறது. கால ஒளியும் அவர்கள் மேல் படுவதில்லை. வஞ்சககமும் சூதும் வாதும்கொண்டு, பொய்மையையும் அநீதியையும் கடைப்பிடித்து குறுக்கு வழியில் வாழ்க்கையில் நடிப்பவர்களெல்லாம் எத்தன்மையினதாயினும் ஒரு பெயரைப் பெற்று உல அரங்கின் நடுமையத்திற்கு வந்து விடுகின்றனர். இவர்கள் தங்கள் ஆரவார ஒலியால் நீதியின் பின்னணிக் குரலைக் கூட எழு வொட்டாது தடுக்கின்றனர்

குறுக்குவழி நடிப்பின் மூலம் கிடைக்கும் உடனடிப் பலன்தான் விரும்பிப்போற்றப்படுகிறது. நேர்மை வழியில் கிடைக்கும் தொலை பயனை விரும்புவாரில்லை.

உலக நாடகமேடையில், போட்டியும் பொருமையும் சூதும்சுயநலமும் கொண்டுமிடுக்கோடும்பகட்டோடும் உலவிவருகின்றனர். நேர்மையும், பண்பும், மெய்ம்மையும் பாராட்டும் கதாபாத்திரங்கள் வீண்பழியையும் பொல்லாப்பையும் சுமந்துகொண்டு எங்கோ மூலையில் வாழ்ந்து வருகின்றன.

இருளின் ஆதிக்கம் ஒளியின் பொலிவை மறைத்துவருகிறது.

நீதி ஆழ்கடல் முத்தாக இருக்கிறது; அநீதி கரையோரக் கிளிஞ்சல்களாக உள்ளன.

நாடக அரங்கின் இயக்கத்தில் சிறு குறைகள் நிகழ்ந்தாலும் காட்சி ஓட்டத்தில் வேண்டாத விளைவுகள் நிகழும். கதைப் பாதை வழிமாறும். குழப்பம் எழும். அமைதி அழியும். நாடகம் நின்றுபடும்.

ஆனால் உலக அரங்கு அப்படி அல்ல.

இங்கு கதாபாத்திரங்கள் நெறி மாறுகின்றன. உண்மைத் திரைச்சீலைக்குப் புறம்பாக உள்ளது மனித பாத்திரங்களின் நடிப்பு. நியாயத்தின் 'பின்னணி இசை, அலட்சியம்செய்யப்படுகிறது. கால ஒளி சரிவரத்தெரிவதில்லை. குறைகள் பல அளவில் நிகழ்கின்றன. காட்சி ஓட்டத்தில் வேண்டாத சில விளைவுகள் விளைந்து கொண்டிருக்கின்றன. பலர் வாழ்க்கைகளில் கதைப்பாதை மாறுகிறது. குழப்பம் எழுகிறது. உலக மேடையின் அமைதி ஆங்காகே அழிந்து கொண்டுதான் இருக்கிறது.

ஆனாலும் உலகநாடகம் நின்றுபடவில்லை!

வேடிக்கையான உலக அரங்கு!
விந்தையான கதாபாத்திரங்கள்!
விபரீதமான சில இயக்கங்கள்!

**உலகம் ஒரு ஒழுங்கில்லாத நாடகமேடை! அதில் தோன்றுவோர்களில் பலர் வரையறையில்லா நடிகர்கள்!**

---

6-ம் பக்கத் தொடர்ச்சி

இவைகளையெல்லாம் நாம் கூறுகிறோம் என்பதற்காக அவர்கள் நம்மை அலட்சியம் செய்து வந்தனர். ஆனால் இன்று.

ஆட்டி வைப்போர் அங்கு! ஆடும் பதுமைகள் இங்கு! என்றும், தி. மு. க. முழக்கம் வெறும் அடுக்குச்சொல் அலங்காரம்அல்ல என்றும், டெல்லி சர்க்காரின் அடிமையாகவே இம்மாநிலம் இயங்குகிறது என்றும், நமக்குக் கட்டளையிட டெல்லியாருக்கு அதிகாரம் இல்லையென்றும், தொழில் துறையில் தென்னாடு பின்தங்கிக் கிடக்கிறது என்றும் டெல்லிக்கு இதனைப் பலமுறை எடுத்துரைத்துள்ளோம் என்றும் தேசியவாதிகளும், அமைச்சர்மார்களும் கூறுவதைக் காணும்போது என்னென்று வியப்பது.

'டெல்லி சர்க்காரின் அடிமைகளாகவே இந்த மாநில சர்க்கார் இயங்கி வருகிறது; மாநில சர்க்காரின் எல்லா நடவடிக்கைகளிலும் தலையிடுவதன் மூலம் நிர்வாக ஒழுங்கு நாளுக்கு நாள் சீர்குலைந்து வருகிறது.'' இதைக்கூறியது தி. மு. க. அல்ல. தேசியத் தொண்டர், முன்னாள் முதல்வர் ஓ. பி. இராமசாமி ரெட்டியார் கூறியுள்ளார்.

"தென்னாடு தொழில் துறையில் பின்தங்கிக் கிடக்கிறது. இந்தப் பிரதேசத்தைத் தொழில்மயமாக்க வேண்டிய அவசியத்தை டெல்லிக்கு அவ்வப்போது எடுத்துரைத்துள்ளோம் என்றும், மத்திய சர்க்கார் திட்டமிடும் பல தொழில்களையும் தென்னாட்டில் நிறுவச் செய்வதற்கும் தென்னாட்டுத் திட்டங்களுக்குப் போதுமான நிதி ஒதுக்கச் செய்வதற்கும் இனித் தென் மாநிலங்கள் ஒன்றுபட்டுப் போராடும்'' என ஆந்திர மாநில நிதி அமைச்சராயிருக்கும் கே. பிரம்மானந்த ரெட்டி கூறியிருக்கிறார்.

இத்தனை நாளும் நாம் கூறிவந்த வார்த்தைகளும், முழக்கங்களும் செவிடன் காதில் ஊதிய சங்கு போன்று இருந்து வந்தது. இப்போது அவர்களே — அவர்களைச் சார்ந்தோரே போராடும் நிலைக்கு, நம் பக்கம் திரும்பி இருக்கிறார்கள். இன்னும் சில நாட்களில் நாம் கோரும் திராவிட நாடு கோரிக்கையையும் அவர்களே கொண்டு வருவார்கள்.

இப்படிப்பட்ட நல்லதொரு வாய்ப்பை நாமும் அவர்களும் ஒற்றுமையுடன் கூடி ஒன்று திரண்டு டில்லியின் பிடியிலிருந்து விடுபட வழி இதோ அண்மையில் நெருங்கி வருகிறது. கவனத்தைச் சிதறவிடாமல் காலத்தை எதிர் நோக்கிக் கண்யமுடன் போராடித் திராவிட நாடு திராவிடருக்காக வெற்றி முரசம் கொட்ட வெகு நாளில்லை. காத்திருப்போம் கவலைத் தோடு.

---

## இசை

மனித வாழ்க்கை துன்பமிகுதியால் நைந்து சிதறும்போது இசை, சிதறிய மனநிலையை ஒருமுகப் படுத்தி இன்பம் தந்து, வாழ்க்கையை நம்பிக்கைத் துறையில் கொண்டுபோய்ச் சேர்க்கிறது. இசை, இன்ப உணர்ச்சிக்குப் பறந்து செல்லும்போது தசையும் இன்ப உணர்ச்சியால் கெட்டிப் பட்டு உறுதியடைகிறது; அது செவியில் பாய்ந்ததும் உள்ளம் இன்பக்கடலாகிறது.

# பெண்ணுள்ளம்

"அதோ போவது யார்? ஆமாம் அவள்தான். தக்காளிக் கூடையைச் சுமந்து கொண்டு போகிறாள் விற்பனைக்கு. தூ, இனி அவள் நடக்கும் வழியிற் கூட நான் நடக்கக் கூடாது. என் தக்காளி இன்று விற்பனையாகா விட்டாற் கூடப் பரவாயில்லை. இனியும் அவள் முகத்தில் விழிப்பதா?"

வேலன் யாரிடமும் இப்படிச் சொல்லவில்லை. அவன் உள்ளம் இப்படி எண்ணியது. தலையில் கனத்துக்கொண்டிருந்த தக்காளிக் கூடையோடு திரும்பிவிட்டான்.

அன்று சந்தை நாள். பலர் அவ் வழியே போய்க்கொண்டிருந்தனர் சிலர் வேலனைப் போல் தக்காளிக் கூடை சுமந்து கொண்டு போயினர். தெரிந்தோரும் போயினர். தெரியாதோரும் சென்றனர். எல்லாரும் வினவினர் வேலனிடம் "ஏன் திரும்பி விட்டாய்? ஏன திரும்பிவிட்டாய்?" என்று.

என்ன பதில் சொல்வதென்று வேலனுக்குத் தோன்றவில்லை. அப்படிக் கேட்ட ஒவ்வொரு கேள்வியும் அவன் உள்ளத்துப் புண்ணில் ஊசியால் குத்திக் கொண்டிருந்தது. அவன் யாருக்கும் பதில் சொல்ல வேண்டியதில்லையென்றாலும், என்ன சொல்வதென்று தோன்றவில்லை. சிலரிடம் பதில் என்ற பெயரில் ஏதையாவது உளறிவைக்கலாம் என்று முனைந்தான். அந்த உளறல்கூட வெளிவரவில்லைச் சொற்களாக. தொண்டை அடைத்துக்கொண்டு விட்டது. அவனுடைய திரும்பும் நிலையும், பேசாநிலையும் வழியில் வந்தோர் பலரையும் பலவாறு பேசச் செய்தது.

ஒரு சமயம் வேலன் வள்ளியை எப்படி எல்லாம் வருணித்திருக்கிறான் தெரியுமா!

"நான் அவள் பின்னால் நடந்து கொண்டே இருப்பேன். அவள் எழிலின் ஒவ்வொரு அணுவையும் நோக்கி நோக்கி, பரந்துபோன என் கண்களுக்கு எப்பக்கம் திரும்பினாலும் அவள் உருவமே காட்சியளித்துக் கொண்டிருக்கும். திடீரென்று ஒரு எண்ணம் தோன்றும். அவள் முன்னால் போய் நிற்பேன். அவளின் முன்னழகு என்னை மயக்கஉலகுக்கே அனுப்பிவிடும். என் எண்ணம், நோக்கம் ஆக எல்லாவற்றிற்கும் ஈடு கொடுப்பது போல் அமையும் அவள் பார்வை

கனகு

அந்தப்பார்வை ஒன்றுக்காக இந்த உலகத்தையே கொண்டு வந்து அவள் காலடியிற் போட்டாலும், அது சிறிது என்றுதான் எனக்குத் தோன்றும்; என்னை மறந்து, எனக்கு முன்னால் வருவோர், போவோரை மறந்து, அப்படியே அவளை மறித்துக்கொண்டு நின்று விடுவேன் சிலவேளைகளில். அப்பொதெல்லாம் தன் கனிமொழியால் என்னை மயக்கஉலகினின்று மீட்டு வருபவள் அவள்தான்."

அதோ தெரிகின்றதே ஊர்க் கோடியில் ஒரு கல்வீடு, அது வேலன் வீடு. அதை அடுத்துத் தெரிகின்ற காரைக்கட்டிடம் தான் வள்ளியின் இல்லம். அவர்கள் உறவு எப்படி வளர்ந்திருக்கும் என்று அவர்கள் வீட்டின் ஒட்டுதலை ஒட்டியே உணர்ந்து கொள்ளலாம்.

வேலன் வீட்டைச் சற்று உற்றுப்பார்த்தால், அது மிகப் பழைய வீடு என்பது தெரியும். அதே போல்தான் வள்ளியின் வீடு—போகின்ற போக்கிலேயே அது ஒரு புதியவீடு என்பதை அறியலாம்.

ஒரு காலத்தில் — அதாவது பத்து ஆண்டுகள் முன்புவரையில் வேலன் வீட்டை அடுத்து ஒரு சிறிய குச்சுவீடு இருக்கும். அந்தச் சிறிய குச்சுவீட்டில் நாலைந்துபேர் வாழ்ந்து வந்தார்கள். ஒரு காணி மேட்டுநிலம். கிழட்டு மாடுகள் இரண்டு. இவைதாம் அந்தக் குச்சு வீட்டுக்காரன் சொத்துக்கள். ஆண், பெண் பேதமின்றி எல்லாரும் கூலிக்குப் போனால் தான் உண்டு, அரைவயிற்றுக் கஞ்சி.

திடீரென்று ஒரு மாறுதல். ஊரார் விழித்த கண் விழித்தபடி இருக்க வந்தது அந்த மாறுதல். அது எப்படி ஏற்பட்டதென்று அதற்கு உரியவர்களுக்கே தெரியாது. எனவே, மற்றவர்களுக்கும் அது தெரிந்திருக்க நியாயமில்லை. ஆயினும், பலரும் பேசிக்கொண்டனர் இந்த மாறுதல்பற்றிப் பலவாறு.

கிழிந்த பாவாடையும், சடை பிடித்து, விரிந்துகிடக்கும் தலையுமாக வேலனிடம் பேசிப் பழகி, விளையாடிப் பொழுதுபோக்கிய வள்ளி, எப்படிப் புதுநிலை பெற்றாள் என்பது வேலனுக்கே தெரியாது. அவன்கூட நீண்ட நாட்களுக்குப் பின்னர்தான் 'இது என்ன மாறுதலா?' என்று புருவத்தை நெரித்துப் பார்த்தபடி, வியந்து கேட்

டான். அப்போது அவள் புதுப் பாவாடை சரசரக்க அவன் எதிரில் நின்ருள். சிக்கு நீக்கப் பெற்ற தலைமயிர் ஒழுங்காக வாரப்பட்டு, பூச்சூடப்பட்டும் இருந்தது. வேலனின் மனக்கண்ணில் அந்தக் காட்சி இன்றுகூட வந்துதோன்றுவது வழக்கம். அந்த வேளையில், அந்த நிலைபற்றி அவன் பெரிதாக எண்ணவில்லை. ஆனால் இன்று அவன் உள்ளம், "அப்பப்ப, அந்தச் சின்னஞ்சிறிய வயதிற்கூட இவள் எப்படிக் காட்சியளித்தாள்!'' என்று வியந்து எண்ணுகிறது.

விரைவிலே குச்சுவீடு இடிக்கப் பட்டது. அங்கே ஒரு மச்சுவீடு தோற்றம்கொண்டது,

வள்ளி மலர்ந்தாள். வேலனும் வளர்ந்தான். கூடவே நெருக்கம் அடைந்தது அவர்தம் நட்பு.

பட்டுப் பாவாடையும், பட்டுத் தாவணியுமாக அவன்முன் காட்சியளிப்பாள் அவள். அவனோ வீங்கிய தோளினை வெளியிற் காட்டிக் கொண்டு இடையிலே கந்தலுடன் அங்கே தோன்றுவான். இந்தநிலை மாற்றத்தால் அவர்களைப் பிரிக்க முடியவில்லை. காரணம், அதனை இருவருமே உணரவில்லை.

அவளின் மலர்ந்த புன்னகையில் நிறைந்த பார்வையில் மனம் பறிகொடுத்து நிற்பான் அவன். அவளோ அவனுடைய பெருமிதமான தோற்றத்தில், கள்ளங் கவடமற்ற நோக்கத்தில், உழைத்துழைத்து வைரம் பாய்ந்து போயிருக்கும உடலமைப்பில் உள்ளத்தை ஓடவிட்டு நின்றிருப்பாள் அவன் முன்னே.

தன் கொல்லையில் விளைந்த தக்காளி விற்பனையால்தான் தன் வீட்டில் அடுப்பு எரிய முடியும். இது வேலனின் இன்றைய நிலை.

தக்காளி மூலம் கிடைப்பது ஒரு துணை வருவாய். அது வந்துதான் ஆகவேண்டும் என்பதில்லை. அதைச் சுமந்துகொண்டு அவள் தான் போகவேண்டும் என்பதோ சிறிதளவும் கிடையாது. தங்கள் கொல்லையில் விளைந்த தக்காளியைத் தன்னையொத்த இளம்பெண்கள் பத்துப் பதினைந்துபேர் கூலிக்குச் சுமந்து செல்ல அவர்களோடு கூடிக்கொண்டு தானும் செல்வது அவளுக்கு ஒரு வேடிக்கை, விளையாட்டு, பொழுது போக்கு—இது வள்ளியின் நிலை.

ஒரு நாள் கொளுத்துகின்ற வெயிலையும் பொருட்படுத்தாமல் உழைத்துக் களைத்துப்போய் வீட்டுக்கு வந்தான் வேலன். அடுத்த வீட்டின் — அந்த மச்சு வீட்டின் எதிரில் ஒரு வில் வண்டி நிறுத்தப் பட்டிருந்தது. "யாரோ தெரிந்தவர்கள் போலும்'' என்று அதைப் பார்த்துவிட்டு அவன் அலட்சியமாகத்தான் நின்ருன்.

ஆனால்,—எதிர் வீட்டுப் பாட்டியும் வழியோடு போய்க்கொண்டிருந்த வேருெரு பெண்ணும் நடத்திய உரையாடல்—

"திருமயத்திலிருந்து வந்திருக்காங்க—ஒரு பெரியவரும், ஒரு அம்மாவும். அந்த அம்மா உடம்பையே பார்க்க முடியல்லே. தலையிலிருந்து கால்வரை ஒரே தங்கமா பூட்டிக்கினு இருக்காங்க''

'என்னத்துக்கு வந்திருக்காங்க?''

"இதுகூடவா தெரியாது!—பொண்ணு பாக்கத்தான்.—அவங்க பேசிக்கிற தினுசைப் பார்த்தா, அடுத்த மாசமே கலியாணம் நடந்தாலும் நடக்கும்.''

மேலும் விளக்கம் தேவைப்படவில்லை வேலனுக்கு.

தரையில் கால்கள் ஊன்றிக் கொள்ள மறுத்தன. தலையோ, என்ன செய்கிறதென்று தோன்ருத ஒரு நிலைக்கு வந்தது. வீட்டுக்குள் புகுந்து கொண்டான். பசியும், களைப்புமாக ஆவலோடு கஞ்சி குடிக்க வந்தவன் எல்லாவற்றையும் மறந்தான்.

இனி உலகமே அவனுக்கு வெறுமை. துறவிகள் கூறும் வெறுமையல்ல. இது வேறுவகையான வெறுமை. இந்த வெறுமையில் அவன் சமாதியடைந்து விட்டான்.

பொழுது நன்ருய் விடிந்திருந்தது. மறுநாள் வேலன் விழித்தெழுந்தபோது. அது புதிய நிகழ்ச்சி. என்றுமே இப்படி அவன் வெயில் தாக்கும் காலைப்பொழுதைக் கண்டவனில்லை. வைகறையைத்தான் கண்டிருக்கிருன்.

முதல் நாள் நிகழ்ச்சி! அதை அவனால் நம்ப முடியவில்லை. "வெறும் கனவா! ஆமாம், அப்படித்தான் இருக்கவேண்டும்.'' அவன் முடிவு செய்துவிட்டான்.

அந்த முடிவு சரியாக இருக்கக் கூடாதா!

"என்னடா தம்பி, உடம்பு சரியில்லையா? நேத்து வெயிலுக்குப் படுத்தவனுச்சே! எத்தனை தடவை எழுப்பிப் பார்த்தேன் தெரியுமா?''

ஐயோ, அவன் முடிவு தப்பாகி விட்டதே!

காலையில் துயில் நீங்கி எழும்போது உணர்வும், உள்ளமும் தெளிவான நிலையில் இருப்பதும், இயங்குவதும் மனிதர்க்குப் பொது இயல்புதானே. அந்தப் பொது இயல்பின் துணைகொண்டு உள்ளத்தைத் திடமாக்கிக்கொண்டான் வேலன். ஒரேகணத்தில் வெறுமையாகிவிட்ட உலகத்தை அவன் எதிர்த்து நிற்பதென,—என்றென்றும் எதிர்த்து நிற்பதெனத் துணிந்துகொண்டுவிட்டான்.

அந்தத் துணிவு வள்ளியை வெறுக்கத் தூண்டியது. வெறுத்தான் அவன். வெறுப்பா அது! அந்தப் பொருளில் இன்னும் ஆழமாகக்கூற வேருெரு சொல் இல்லையே!

அங்கே வள்ளியின் நிலை.

அடுத்த வீட்டுக்குப் போகலாமென்று வெளியில் வந்து ஓரடி எடுத்து வைத்தாள் அந்தப் பக்கமாக.

"அம்மா இங்கே வா'' பின்னல் நின்று கூப்பிட்டான் அவளைப் பெற்றவன்.

வள்ளி விதிர் விதிர்ப்புடன் திரும்பிப் போனுள்.

"இதோ பார், இனி வெளியில் நீ போகக்கூடாது.'' அவன் பச்சையாகச் சொன்னுன்—"அந்தப் பயல் இருக்கிருனே, வேலன்-அவனிடம் இனி நீ பேசுவது கூடாது.''

வள்ளியின் உள்ளத்தில் ஆயிரம் ஆயிரம் எண்ணங்கள் எழுந்து, எழுந்து அமிழ்ந்தன. வார்த்தையாக ஒன்றும் வாவில்லை. நா மேலண்ணத்தோடுஒட்டி, உலர்ந்து போயிற்று. திரும்பிப் போய்விட்டாள் வீட்டுக்கு.

அவளை அறியாமல் அவளுக்குக் கட்டுக் காவல். வீட்டுக்குள்ளேயே கட்டுக் காவல்.

"வேலனை இனி இந்த வாழ்வில் காணவே முடியாதா?''

அவள் துன்பப் பெருமூச்சு விட்டாள். தந்தையை எதிர்க்கத் துணிவில்லாமல், வலிவு இல்லாமல் தனிமையில் கிடந்து புழுங்கிக் கொண்டிருந்தாள்.

சன்னல் கம்பிகளைப் பிடித்தபடி வெளியில் பார்த்துக்கொண்டிருந்தாள் வள்ளி விரக்தியோடு. அப்போதுதான் அந்த யோசனை அவள் உள்ளத்தில் முளைவிட்டுக் கிளைவிட்டது.

"ஆமாம்; இந்தத் தக்காளிக் கூடைக்காரர்களோடு போவதை அப்பா தடுக்கமாட்டார். முன்னும் பின்னும் பக்கவாட்டிலுமாகப் பத்துப் பதினைந்து பேர் கண்காணித்துக் கொண்டு வருகிறார்கள் அல்லவா!"

சென்றாள் அவள் தந்தையின் உத்தரவுபெற்று. சென்றாள் அவள் உள்ளத்தை அழுத்திக்கொண்டிருக்கும் துன்பச் சுமையுடன் தலையில் ஏற்றிய தக்காளிச் சுமையையும் தாங்கிக்கொண்டு.

சென்றவள் கண்டாளா தன் அன்புக்குரியவனை? கூறிவிட்டாளா தன் உள்ளத்தில் அடைத்துக் கொண்டு கிடந்தவை அனைத்தையும் அவனிடம்?

காணவே முடியவில்லையே! கூறுவதெங்கே?

ஊரும், உலகும் அவளுக்காக அனுதாபப்படவில்லை. மாறாக, அவள் மீது குற்றக் கணைகளைத் தொடுத்தன. வசவுகளை, பழிச் சொல்லை வாரி வாரி இறைத்தன.

அவள் அன்புக்குரியவனின் செய்தியை — அப்படி ஒருவேளை அவன் அனுப்பியிருந்தாற்கூட— தடைசெய்து தவிடுபொடியாக்குவதற்கு எப்போதும், எப்போதும் தயாராய் இருந்தது அவளைச் சுற்றியிருந்தகட்டுக்காவல். ஆனால் அவள்மீது வீசப்பட்ட இந்த வசவுகளை, பழிமொழியை, குற்றக் கணைகளை அந்தக் கட்டுக்காவல் ஏனோ தடுக்கவில்லை. தடுக்க விரும்பவில்லை. முனையவில்லை. அவை வந்தன. தடையின்றி வந்தன. மடை திறந்த வெள்ளமென வந்தன. வந்து. வந்து அவள் காதுகளைத் தாக்கிக்கொண்டிருந்தன.

அந்த நாள் வந்தது. முன்பின் அறியாதவனோடு, மனத்தில் வரிக்காதவனோடு மணவறை புகுந்து, மணைமீதமரும் நாள்.

அந்தத் திருமணம் இனிதே நிறைவேறுதற்கான எல்லா ஏற்பாடுகளையும் புரிந்து வைத்திருந்தோர், அதைப் பார்ப்பதற்கு ஆவலோடு கண்களை அகல விரித்துக் கொண்டிருந்தோர் எல்லாரையும் வியப்பில் ஆழ்த்தும் ஒரு செயல் அங்கே நிகழ்ந்தது.

ஆமாம், பெண் புலியெனச் சீறி வந்து நின்றாள் மணக் கோலத்தையெல்லாம் உதறி யெறிந்துவிட்டு வள்ளி அங்கே.

அவள் சொன்னாள்: "எனக்கு ஏற்கெனவே கணவன் இருக்கிறான். வேலனுக்கும், எனக்கும் மறைமுகத் தொடர்புண்டு. உடல் சம்பந்தமும் உண்டு."

எப்படித்தான் அவளுக்கு இந்த அரிய துணிச்சல் ஏற்பட்டதோ!

பிள்ளை வீட்டார் சீற்றத்துக் கொண்டு,—தங்கள் வாயிலிருந்து கிளம்பும் வசவுமாரிகளை எல்லாம் வள்ளியின் பெற்றோர் மீதும், சுற்றத்தார் மீதும் பொழிந்து தள்ளிவிட்டு, உடனே கிளம்பினர்.

இப்போது வள்ளி வாழா வெட்டி.

மலையே இடிந்து தலைமீதில் வந்து விழநேரினும் மாறாத மனவுறுதி கொண்டவள் பெண் என்பதை வள்ளி உலகுக்குக் காட்டிவிட்டாள். வாழ்க்கையில் ஒருவனை மட்டுந்தான் ஒருத்தி வரிக்க முடியும், காதலிக்க முடியும் என்ற பேருண்மைக்கு இலக்கியமாய் நின்றாள் அவள்.

வேலனே!—

★

# இலட்சியவாதி

—(சுதாகரன்)—

"என்னண்ணா? இன்னுமா தூங்கவில்லை?" என்று கேட்டாள் அப்பொழுதுதான் விழித்துக் கொண்ட மல்லிகா"

"இன்னும் இல்லை...தூக்கம் வந்தால்தானே?" என்று இழுத்தான் கண்ணன்.

"என்னண்ணா, மணி பன்னிரண்டாகப் போகிறது. இப்படிக் கண் விழித்தால் இந்த உடம்பு என்னத்துக் காகும்? அதிலும் புகையிலை நெடி வேறு..."

"உம்...நான் தூக்கம் வந்தால் தூங்கப் போகிறேன். நீபடுத்துத்தூங்கம்மா" என்றான் கண்ணன்பரிவோடு தன் தங்கையைப் பார்த்து.

"இப்படி எனக்காக உழைத்து நீயும் படுத்துகிட்டா அப்புறம் நான் நடுத்தெருவில்தான் நிற்கணும்"?

"ஐயயோ! அதெல்லாம் ஒன்றும் ஆகாதம்மா. நீ படுத்துக்கோ? என்றான் கண்ணன்.

மல்லிகா இன்னும் என்னவோமுணுமுணுத்துக் கொண்டே படுத்துக் கொண்டாள். கண்ணன் தன் தங்கையின் உருவை ஒருதடவை நோட்டம் விட்டான். எவ்வளவு அழகான உருவம்? உம். அழகு ஒன்று மட்டும் இருந்தால் போதுமா? பணமும் வேண்டாமா? அழகிருந்தால் பணமிருக்காது. பணமிருந்தால் அழகிருக்காது. இரண்டும் இருக்குமிடத்தில் குணத்திற்குப் பஞ்சம்! இது உலக நியதி! மல்லிகாவிடம் அழகிருந்தது. குணமிருந்தது. ஆனால் பணம் தான் இல்லை. அவள் மாடியில் அழகு செய்ய வேண்டிய மலர். இந்த மண் குடிசையில்—சேற்றில் செந்தாமரை போல்—இருப்பது குற்றம்தான். சேற்றில் முளைத்த செந்தாமரை சேர வேண்டிய இடத்தில் சேர்ந்து விட்டால் அழகுதான். ஆனால் பணம் என்ற ஒருதடை, மல்லிகாவை இந்த நிலைக்குக் கொண்டுவந்து விட்டது! அந்தப்பணத்திற்காகத்தான் இரவைப் பகலாக்கி உழைத்துக் கொண்டிருக்கிறான் கண்ணன். ஒருபக்கம் புகையிலைத் தூள். மற்றொரு பக்கம் இலை. இரண்டையும் இரண்டு கையில் எடுப்பதுதான் தாமதம், எதிரில் ஒரு பீடியாக வந்து விழும்!

ஆம்! அவன் ஒரு பீடித்தொழிலாளி! ஒரு நாளைக்கு இருபது மணி நேரம் உட்கார்ந்த இடத்திலேயே, இப்படி அப்படி எழுந்துகூடப்போகாமல் பீடி சுற்றிக்கொண்டிருப்பான். பாதி நேரத்திலேயே இடுப்பு இருக்கிறதா இல்லையா என்ற சந்தேகம் வந்து விடும்! புகையிலையின் நெடி பழக்கப் பட்டுவிட்டது தான்! மண்டைக் குடைச்சல் வேறு எடுக்க ஆரம்பித்து விடும், கைவிரல்களும், நீட்டியகால்களும் அவனுடைய இட்டத்திற்கு வேலை செய்ய மறுக்கும்! ஆனால்

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தால் அவன் தங்கையின் வாழ்வு?

முன்பெல்லாமாவது கண்ணன் சிலருக்காக வாழ்ந்தான். இப்பொழுது அவன் வாழ்வே அவன் தங்கை மல்லிகா ஒருவளுக்காகத்தான். அவள் வாழ்வில் விளக்கேற்றி வைக்க வேண்டுமென்பதுதான் அவனது ஒரே இலட்சியம்.

மல்லிகா மட்டுமென்ன, கன்னியல்ல - கல்யாணமானவள்தான்! கண்ணன் எத்தனையோ கனவுகள் கண்டான். அதில் தன் தங்கையை நல்ல இடமாகப் பார்த்துத் திருமணம் செய்து கொடுக்க வேண்டுமென்பது ஒன்று. அதன்படியேதான் நடந்தது. மல்லிகாவின் கணவன் கோயமுத்தூரிலே ஒரு ஆலையில் வேலையாக இருந்தான். இவனைப்போல் தினக் கூலி என்றில்லாது மாதா மாதம் சம்பளம் வாங்குபவன். அதுவே ஒரு மதிப்புத்தானே! அவனும் நல்ல அழகான வாலிபன். வள்ளிக்கு அவனை மணப்பதில் இரட்டை மகிழ்ச்சிதான். ஆனால் அவன் குணம்தான் கொஞ்சம் பிற்போக்கானது என்பது பின்னால்தான் தெரிந்தது!

கண்ணன் என்னவோ தன் தங்கையின் வாழ்வு நன்றாக அமைய வேண்டுமென்றுதான் மல்லிகாவின் கணவன் கேட்ட ஐந்நூறு ரூபாயைக் கொடுப்பதாக ஒத்துக்கொண்டான். அவனுக்குத்தான் வேறு யார் இருக்கிறார்கள். தங்கையின் கையில் கொடுத்தாலென்ன? அவள் கணவன் கையில் கொடுத்தாலென்ன. தங்கையின் கைப்பொம்மையாகத்தான் அவள் கணவன் இருப்பான் என்று கண்ணன் நம்பினான். ஆனால் அவன் நினைத்ததற்கு நேர்மாறாக நடந்துகொண்டான் அவள் கணவன். "ரூபாய் என்று வருகிறதோ அன்றுதான் நீயும் என் வீட்டிற்கு வரலாம்" என்று சொல்லிவிட்டு மல்லிகாவை இங்கேயே விட்டுவிட்டுப் போய்விட்டான் அவள் கணவன். கண்ணனுக்கு என்னமோ தைரியம் தான். எங்காவது கடன் வாங்கியாவது தன் தங்கையை அனுப்பிவிடலாம் என்று நம்பினான். அவனுக்கெனச் சொத்து ஒன்றும் இல்லாவிட்டாலும், அவனுடைய உழைப்பையும் நாணயத்தையும் நம்பியே எவ்வளவோ பேர் கடன் கொடுப்பார்கள்.

ஆனால் அந்த நேரம் பார்த்துத்தான் தொழிலாளர் போராட்டம் ஆரம்பமாகியது. தொழிலாளர் வட்டாரத்திலே கண்ணன் ஒரு முக்கியமான புள்ளி. தொழிலாளர்களுக்கு அவன் ஒரு தந்தை! முதலாளிகளுக்கு அவனைக் கண்டாலே குலை நடுக்கமெடுக்கும்! அதனால் முதலாளிகள் இவனை எப்படியாவது ஒருகை பார்த்துவிட வேண்டுமென்றே நினைத்தனர்.

போராட்டம் தீவிரமாகி வேலை நிறுத்தமும் ஆரம்பமாகியது. அதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள்! இச்சமயத்தில் பீடிக்கம்பெனி முதலாளியின் கைக்கூலிகள் சிலர் இவர்களுக்கு எதிராக வேலை செய்தனர். கண்ணன் தலைமையில் வேலை நிறுத்தம் தொடங்கியது. தொழிலாளர்களுக்கும் அவர்களுக்கும் மோதல் ஏற்பட்டது. மோதல் என்றால் போலீஸ் இல்லாமல் இருக்குமா? அதிலும் பீடிக்கம்பெனி முதலாளிக்கு போலீஸ் வட்டாரத்தில் அதிக செல்வாக்கு!

'எத்தனையோ விதத்தில் ஒருவருக்கொருவர் இலாபமாக நடந்து கொள்வர்! அந்தப் பீடிக் கடை முதலாளி வஞ்சத்தை தீர்த்துக் கொள்ள நினைத்தார். பணம் செய்யாத விஷயங்கூட உண்டா? அதன் பலன் மோதலில் துப்பாக்கியால் சுட நேர்ந்தது, கண்ணனின் காலில் குண்டுபாய்ந்து விட்டது! 'ஆஸ்பத்திரியில்' பதினைந்து நாட்கள் சிகிச்சை பெற்றபின், ஒரு காலை இழந்து வீட்டிற்குத் திரும்பினான் கண்ணன்.

இப்பொழுது அவனை நம்பிப் பணம் கொடுக்க யாரும் முன் வரவில்லை. அவனுடைய உழைப்பையும் நாணயத்தையும் நம்ப யாரும் தயாராய் இல்லை. மல்லிகா கண்ணனோடேயே இருக்க வேண்டியதாயிற்று. இருந்தும் கண்ணன் முயற்சியை விடவில்லை. அவளும் அவனும் கடினமாக உழைக்க ஆரம்பித்தனர். பீடி சுற்றுவதினால் ஒரு நாளைக்கு ஏழு அல்லது எட்டு ரூபாய்கள் அவர்கள் இருவரும் சம்பாதித்தனர். அன்றிலிருந்து சுமார் ஒரு வருட காலமாக மிச்சப்படுத்திக் கொண்டே வந்தனர். ஆயிற்று இன்னும் இரண்டே நாட்களில் மல்லிகாவின் ஏக்கம் நீங்கும். அவள் கணவன் வீடு செல்லலாம்.

கண்ணனிடமிருந்து நீண்டதோர் பெருமூச்சு வெளிப்பட்டது. தன் தங்கையின் முனகல்கேட்டுச் சிந்தனையிலிருந்து விடுபட்ட அவன் எங்கே அவள் விழித்துக்கொள்ளப் போகிறாளோவென்று அவசர அவசரமாகப் பீடிகளையும் காலிப் புகையிலைச் சாடியையும் எடுத்துவைத்துவிட்டுப் படுத்துக்கொண்டான்.

அன்று மல்லிகாவை ஊருக்கனுப்பும் நாள்! இரவெல்லாம் கண் விழித்து என்னென்னவோ மூட்டை முடிச்சுகளைக் கட்டினான் கண்ணன், அவளுக்கும் தன் கணவனின் வீடு செல்லப் போகிறோமே என்று ஒருபக்கம் மகிழ்ச்சியாக இருந்தாலும், இவ்வளவு நாள் தாயும் தந்தையுமாக வளர்த்த அண்ணனை விட்டுப் பிரியப் போகிறோமே என்று ஒருபக்கம் சோகத்திலாழ்த்தாள். அதிலும் ஒரு காலை இழந்து நொண்டியாக நடக்கும் அண்ணனுக்கு உதவியாக யார் இருக்கிறார்கள்? அக்கம் பக்கம் உள்ளவர்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று என்ன அக்கறை?

ஆனால் எவ்வளவுதான் பாசமான அண்ணன் இருந்தாலும், ஒரு பெண்ணுக்கு கணவன்தானே முக்கியம். இதை நன்றாக உணர்ந்தவன் கண்ணன். அதனால்தான் அவனுடைய உள்ளத்துஉணர்ச்சிகளை அவன் வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை!

கண்ணனும் மல்லிகாவும் இரயிலடிக்கு வந்து சேர்ந்தார்கள். கோயமுத்தூருக்கு ஒரு 'டிக்கட்' வாங்கிக்கொடுத்து வண்டியிலேற்றி உட்கார வைத்துவிட்டு இறங்கினான் கண்ணன். வண்டியும் புறப்பட்டது!

கையைத் தூக்கி ஆட்டி விடை கொடுத்தான் கண்ணன். பாசம் கண்ணீரில் கரைந்து வெளிப்பட்டது. நீர் வழியும் கண்களுடன் பிரிந்து செல்லும் தங்கையை நினைத்து அவன் உள்ளம் குமுறியது. அவனுக்குள்ள ஒரே ஒரு உறவு எட்டாத இடத்திற்குச் செல்வதாக அவன் மனம் எண்ணியது.

திரும்பி நடந்தான். கால்கள் தள்ளாடின. மரக்கால் தார்சாலையில் வழுக்கியது. இரவெல்லாம் கண் விழித்த மயக்கம் வேறு. இதயத்தை அழுத்தும் பாசத்தின் சுமை வேறு. அடக்கமுடியாத அழுகை. கண்ணீர் கண்ணுக்குத் திரையிட்டது. பின்னால் அலறிய "ஆரன்" சத்தத்தினால் ஒதுங்க நினைத்தவன் நடு 'ரோட்டி'ன் பக்கமாகவே வேகமாக ஓடினான். சட்டத்தின் துணையுடன் குடித்துவிட்டுக் கனவேகமாகப் பின்னால் வந்த பீடி முதலாளியின் கார் தள்ளாடி விழுந்த நொண்டிக் கண்ணனின் உடலை அரைத்து அப்பளமாக்கியது!

முதலாளிக்கென்ன? எதிராளி தவறாக நடந்தான் என்று எடுத்துக் காட்டத்தானா முடியாது?

ஆனால் அந்தப் பீடித் தொழிலாளி கண்ணன், தன் சகதொழிலாளர்களின் நலனுக்காகத் தன் காலை இழந்தான். அப்பொழுதும் அவன் இலட்சியம் நிறைவேற்றப்பட்டது. தன் தங்கையின் வாழ்வுக்காக அல்லும் பகலும் பாடுபட்டான். அவனுடைய இலட்சியம் நிறைவேறிய அதே சமயம் தன் உயிரையே இழந்தான்! ஒருவேளை இதுதான் அவனுடைய இறுதி இலட்சியமோ?

★

# பொங்கும் கண்ணீர்

—[மக்கள் செல்வன்]—

[ஆசிரியர் நாகநாதன் வெளியிலிருந்து வருகின்றார். உள்ளே இருக்கும் நாற்காலியில் அமருகின்றார்.]

நாகநாதன்:- தங்கம்! தண்ணீர் கொண்டுவா.

[தங்கம் தண்ணீர் கொண்டு வருகிறாள்.]

நாக:- எங்கே தங்கம்! குழந்தைகளைக் காணோம்?

தங்கம்:- அடுத்தவீட்டு இளமதி வந்து அழைத்துக்கொண்டு போயிருக்கிறாள்.

நாக:- ஏன் தங்கம். நாளும் கிழமையும் அங்கெல்லாம் போகச் சொல்லலாமா?

தங்:- மற்றவர்களைப்போல, அடுத்த வீட்டு அக்காவை நினைக்காதீர்கள். ரொம்பவும் நல்லவர்கள். அவர்களே வந்து கூப்பிடும்போது எப்படி அனுப்பாமல் இருக்கமுடியும்?

நாக:- அதுசரி. நம்முடைய வறுமையை வெளியில் காட்டிக் கொள்ளக்கூடாது தங்கம். அப்போதுதான் பிறர் நம்மை மதிப்பார்கள்!

தங்:- உண்மைதான் அத்தான்! காலையிலே சின்னவன் மிட்டாய் வேண்டுமென்று அழுதான். அப்பாவாங்கிவருவார்கள் எனச் சமாதானப்படுத்தினேன்.. நீங்கள் ஒன்றும் வாங்கிவரவில்லையா?

நாக:- என்ன செய்வது தங்கம்? நாளும் கிழமையும் யாரைக் கேட்பது? நிர்வாகியைப் பார்க்கப் போனேன். அவர் என்னைப் பார்த்தார். நான் அவரைப் பார்த்தேன். இருவரும் சிறிது நேரம் பேசிவிட்டு வீடு திரும்பினேன்.

தங்:- (சிரித்தல்)

நாக:- ஏன் தங்கம் சிரிக்கின்றாய்?

தங்:- எனக்கு வைக்கப்பட்டிருக்கும் பெயரை நினைத்தேன், சிரிப்பு வந்துவிட்டது. எனது பெற்றோருக்கு என்ன ஆசை பார்த்தீர்களா?

நாக:- உனக்குப் பெயர்வைத்ததில் தவறொன்றுமில்லை! தமிழகத்திலுள்ள தங்கத்தை எல்லாம் ஒன்றுசேர்த்து வார்த்த தங்கச் சிலைபோல்தான் நீ இருக்கின்றாய். ஊம்! நீ இருக்கவேண்டிய இடத்தில் இருந்தால் இன்னும் எவ்வளவு அழகாய் இருப்பாய் தெரியுமா?

தங்:- நீங்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லையே!

நாக:- புரியாதுதான். நான் அன்றே சொன்னேன்; இந்த ஆரம்ப ஆசிரியனைக் காதலிக்காதே — திருமணம் செய்து கொள்ளாதே என்று. கேட்டாயா? இந்தப் பத்தாண்டு கால வாழ்வில் உனக்கு ஓர் நல்ல சேலை உண்டா? ஓர் பொன் நகையைத்தான் கண்டதுண்டா? வேறு சினிமா, நாடகம் போன்ற இன்ப நிகழ்ச்சிகளையாவது நீ அறிந்ததுண்டா? உன் வாழ்வில் எந்தச் சுகத்தை அனுபவிக்க முடிந்தது?

தங்:- என்ன அத்தான்! ஒன்றும் தெரியாதவர்கள்போல் பேசுகின்றீர்கள். எனக்குத் தங்க நகைகள் எதற்கு? தங்களின் தங்க மனசும்—தங்கக் குணமும்—புன்னகை பூத்த முகமும் இருக்கும்போது அதற்கு ஈடாக எது கொடுத்தாலும் நிகராகுமா?

நாக:- அதற்குச் சொல்லவில்லை தங்கம்: நீ அப்போதே ஒரு செல்வந்தனையோ, பெரிய உத்தியோகத்தில் இருப்பவர்களையோ மணந்திருந்தால் எவ்வளவு சுகத்துடன் இருந்திருக்கலாம்!

தங்:- அத்தான்! பெண்களுக்கு பொன்னோ பொருளோ பெரிதல்ல! மனதிற்கு பிடித்த மணாளன் கிடைத்தால், அதுவே பெரிய சொத்து. அதுவும் கருத்துள்ள பெண், உடலில் வீரமும், உள்ளத்தில் கூச்சமும் உள்ள வாலிபனையே விரும்புவாள் என்பது தங்களுக்கு தெரியாததல்ல!

நாக:- தங்கம்! நீ பெயரில் மட்டும் தங்கமல்ல அறிவிலும் தங்கம்! குணத்திலும் தங்கம்! உன் உள்ளத்தை வேதனைக்குள்ளாக்கிய என்னை மன்னித்துவிடு கண்ணே!

[ஓர் பையன் நாளிதழ் ஒன்று கொடுத்துவிட்டுச் செல்கிறான். ஆசிரியர் படிக்கின்றார்.]

நாக:- மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் ஆசிரியர்களின் அந்தஸ்து உயர்த்தப்படும். மத்திய கல்வி அமைச்சரின் உறுதிமொழி.

தங்:- அதுவரை பிச்சை எடுக்க வேண்டியதுதான்! நான் அப்போதே இந்தப் பாழும் வேலையை விட்டுத் தொலையுங்கள் என்றேன், கேட்டீர்களா? உங்கள் உதவி பெற்றுக் கடை வைத்த மளிகைக்கடை மாரிமுத்துவும், கறிகாய்க்கடைக் காத்தமுத்துவும் இன்று எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பது உங்களுக்கே தெரியும். நீங்கள் சேவை சேவை என என்றும் வறுமையுடன் உழலுகின்றீர்கள்.

நாக:- தங்கம்! காத்தமுத்துவும், மாரிமுத்துவும் நேர்மையான வழியிலா சம்பாதித்துள்ளார்கள்?

தங்:- அதை எல்லாம் யார் பார்க்கின்றார்கள். நம்மைப்போல வறுமையுடனும், ஏழ்மையுடனும் இல்லாமல் நிம்மதியாக இருக்கின்றார்கள். அது ஒன்றே போதுமே!

நாக:- ஆசிரியர்களுக்கு வருவாய் குறைவே தவிர, அவர்கள் பணி உயர்ந்தது! ஒப்பற்றது! அதற்கு ஈடு இணை எதுவுமே கிடையாது தங்கம்!

தங்:- உண்மைதான்! அதை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்தால் வயிறு நிரம்பிவிடுமா அத்தான்! எல்லோரும் பாரதமாதாவின் புதல்வர்களாக இருக்கும்போது பாரபட்சம் காட்டலாமா?

நாக:- என்ன சொல்கின்றாய்?

தங்க:- இமயம்முதல் குமரிவரை ஒரேநாடு! இதில் எந்தவிதப் பிரிவினையும் கிடையாது என்று

சொல்லிவிட்டு, பலதரப்பட்ட நிர்வாகங்களில் வேலைசெய்யும் ஆசிரியர்களுக்கெல்லாம் உதவிச் சம்பளம் கொடுத்திருக்கும் போது தனியார்துறைப் பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டும் சம்பளம் கொடுக்காமல் இருப்பது முறையா? நீதிதானா?

நாக:- தங்கம்! எதிர்க்கட்சிப் பத்திரிகை ஏதாவது படிக்கிறாயா?

தங்:- ஏன்!

நாக:- இல்லை, உன்பேச்சுச் சிறிது சூடாக இருக்கிறதே என்று பார்த்தேன். தனியார்துறைப் பள்ளிகளின் ஆண்டுக் கணக்கு பார்க்கவேண்டியிருப்பதால் (டிசம்பர்) மாதச்சம்பளம் கொடுக்கப்படுவதில்லை.

தங்:- பழத்தைத் தின்பவன் ஒருவன், தண்டனை அனுபவிப்பவன் இன்னொருவன் என்பதைப் போல பள்ளி நிர்வாகச் செலவிற்காகக் கொடுக்கப்படும் தொகைக்கும் ஆசிரியர்களின் ஊதியத்தைக் கொடுப்பதற்கும் என்ன சம்பந்தம்?

நாக:- என்ன செய்வது தங்கம்? கேட்டால் ஆண்டுக் கணக்குப் பார்க்க வேண்டியிருப்பதால் கணக்குப் பார்த்த பின்னர்தான் ஊதியம் கொடுக்கப்படும் என்கின்றனர்.

தங்:- ஆசிரியர்களின் கோரிக்கையை அரசுக்குத் தெரியப்படுத்த வேண்டும். ஊதியம் கொடுக்காவிட்டாலும், முன்பணமாவது கொடுக்க வேண்டாமா? கல்வியில் மட்டும் சீர்திருத்தம் செய்யத் தெரிந்தவர்களுக்கு இது தெரியாதா?

நாக:- தங்கம்! நமக்கு ஏன் பொல்லாப்பு. உன் வேலையைப் போய்க் கவனி.

தங்:- ஆசிரியர் (குடும்பத்தில் உள்ளவர்)களின் பொங்கும் கண்ணீரைத்துடைக்காமல்கல்வியில் மட்டும் சீர்திருத்தம் செய்துவிட்டால் கல்வி வளருமா? கல்வியின் தரம் உயர்ந்துவிடுமா? முதலில் அவர்களின் பொங்கும் கண்ணீரை துடைக்கவேண்டும். அப்போதுதான் கல்வி வளரும்! கல்வியின் தரமும் உயரும். ஆட்சியில் உள்ளவர்கள் இதைச்செய்வார்களா முதலில்?

★

# அந்த முடிவு!

—(கே. ஜே. சம்பத்)—

சில நாட்களாகவே சச்சிதானந்தரின் மனதில் அமைதி இல்லை. சாந்தமும் புன்னகையும் தவழும் அவர் முகம் ஏனோ வாடிக் கருகி இருந்தது. அவருடைய கவுரவம் புகழ் மானம் மரியாதை எல்லாம், அவர் மகன் சம்மந்தன் சொல்லப் போகும் 'அந்த' முடிவில் ஊசலாடிக்கொண்டிருப்பதாக நினைத்தார் அவர்!

சம்மந்தத்திற்கும் தன் தந்தையின் விசித்திரமான—புரிந்து கொள்ள முடியாத மனப்போக்கு ஆச்சரியத்தையும் வேதனையையும் தந்தது. தன் எதிர்காலத்தை இருள் சூழ்ந்துவிடுமோ என்ற கவலை அவன் மனதை அரித்தெடுத்தது!

நல்ல, மகிழ்ச்சிகரமாகத் தொடங்கவேண்டிய காரியம், தொடங்கும் பொழுதே இப்படிச் சச்சரவில் ஆரம்பிக்கிறதே என்ற கவலை இருவர் மனதையும் வருத்தாமலில்லை. ஆனால்?

கவலையோடு தலையில் கை வைத்தபடி சிந்தனையில் இலயித்திருந்தார் சச்சிதானந்தர்.

ஊரில் அவருக்குப் பெரிய சமயப் பிரசங்கி என்ற கீர்த்தி. சிவானந்த பண்டார சந்நிதிகள் கூட அவருடைய ஆழ்ந்த சமயப்-பற்றையும் ஞானத்தையும் பாராட்டிப் பெருமைப்படுத்தியிருக்கிறார். அத்துடன் மட்டுமா? பழம் பெரும் சமயக் குடும்பத்தின் வழி வந்தவர் என்று பலரும் பலபடப் புகழக் கேட்டுப் பூரித்துப்போன அவருடைய மனம். இவ்வளவு பெருமைகளுக்கும் தன் மகன் உலை வைத்துவிட்டால்!...

இன்று அவன் தன்னுடைய முடிவைச் சொல்வதாக வாக்களித்திருந்தான். அவனைத்தான் இப்பொழுது அவர் எதிர்பார்த்துக் கொண்டிருப்பது.

தலையை உயர்த்திப் பார்த்தார். சுவரில் பொக்கைவாய்ப் புன்னகையுடன் காந்தியடிகளின் படம். அது அவர் கண்ணில் பட்டு, மன ஆழத்தில் உறங்கிக்கிடந்த பழைய நினைவுகளை விழிப்படைய வைத்தது.

தன் மனவேதனைக்கு இவரும் ஒரு காரணமாய் இருக்க நேரிட்டதை நினைத்துப் பெருமூச்செறிந்தார். ஆனால் முன்பெல்லாம் காந்தியடிகள் ஒரு அவதாரபுருஷர் என்றே அவர் நம்பினர். அடிகளாரின் எல்லாக் கருத்துகளையும் குறிப்பாக, சமுக சீர்திருத்தக் கருத்துக்களை—சச்சிதானந்தர் ஏற்றுக் கொண்டாரோ, இல்லையோ அதுவேறுவிஷயம். ஆனால் அடிகளார், "ஜாதி உயர்வு தாழ்வு கூடாது" என்று பேசி, அது பத்திரிகைகளில் வந்தால் அவை மகானின் திருவாய் உதிர்த்த மணிமொழிகள் என்று புகழ்வார். அவர், "கலப்புத் திருமணத்தால் சமுக வேற்றுமைகள் ஒழியும்" என்று எழுதினால், உடனே—(அதாவது யோசித்துப் பார்க்காமல்) அதைப் பாராட்டுவார். "அவை, அவதார புருஷரின் அருள் வாக்குகள்" என்று, கூறி அடிகள்மீது தனக்குள்ள பக்தியை மற்றவர்கள் முன் காட்டிக்கொள்வார்! அதோடு நிற்பாரா என்றால், நிற்கமாட்டார்! இன்னும் பலபடி முன்செல்வார். தான் பேசும் சமயக் கூட்டங்களில் சமயத்துடன் தேசியத்தையும் இழைத்துக் குழைத்து வழங்குவார் சச்சிதானந்தர்.

ஒருமுறை, அவருடைய மகன் சம்மந்தன் படித்துவந்த கல்லூரியில் அவருடைய கூட்டத்திற்கு ஏற்பாடாகியிருந்தது. அதற்கு அவருடைய குருநாதரும், பிரபல தேசியத் தலைவருமான சிவனேசர் அவர்கள் தலைமை தாங்குவதாக இருந்தது. பிறகு சொல்லவும் வேண்டுமா? சச்சிதானந்தரின் பிரசங்கத்திற்கு எல்லையில்லாமல் போய்விட்டது! அன்று அவர் பொழிந்த வெள்ளத்தில் சில துளிகள் இவை:—..."கலப்புத் திருமணம், கடவுளுக்கும் சாஸ்திரங்களுக்கும் விரோதமானது என்று செல்வது மடமை. சமயத்தை ஆழ்ந்து கற்றவர்கள் அப்படிச் சொல்லமாட்டார்கள். ஆதிசைவ வேதியராகிய சுந்தரமூர்த்தி நாயனார் அவர்கள் ஜாதித்

திருமணம்செய்துகொள்ளமுனைந்த பொழுது, இறைவன் அம்மணத்தைத் தடுத்து, அவருக்குக்கலப்பு மணம்செய்துவைத்தார்.மாந்தருள் தெய்வமாய்இயங்கும் காந்திமகான் அவர்கள்கூட இன்று இறைவனின் அவதாரமாக இருந்து நமக்கு அந்த உபதேசங்களை அருளிவருகிறார்...''

அன்று இப்படிஅவர்பேசியதை இதற்குள் அவரே மறந்துவிட்டிருக்கலாம். ஆனால் அன்று அதைக் கேட்டுக்கொண்டிருந்த சம்மந்தத்தின் இளமைஉள்ளத்தில் அது ஆழப் பதிந்துவிட்டது. புதுமைக் கருத்துக்கள் அவனை வசீகரித்தது போலவே, அவனுடன் படித்துவந்த இன்னொரு இள உள்ளத்தையும் அது மிகவும் கவர்ந்தது. அந்த உள்ளம் ஒரு ஆணின் உள்ளமாக இருந்து தொலையக்கூடாதா!...

இதை நினைத்தபொழுது சச்சிதானந்தருக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது. அந்தத் தருக்கன் தனக்குப் பிறக்காமலாவது இருந்திருக்கக் கூடாதா? யாரோ ஒரு அழகிய மங்கையாம்! அவளும் சம்மந்தனும் ரொம்பவும் நெருக்கமாகப் பழகுகிறார்களாம்! சிரித்துப் பேசுகிறார்களாம்! நெடுஞ்சாலைகளில் இருவரும் தனியே நடந்து செல்கிறார்களாம்! பூங்காவில், அந்தி மயங்கும் வேளையில் மலர்ச்செடிகளின் மத்தியில் அமர்ந்து இரகசியம் பேசிக்கொண்டிருக்கிறார்களாம்'— இப்படிப்பட்ட செய்திகளா தன் காதில் விழவேண்டும்! தன் காதுகளையாவது செவிடாக்கிவிடும்படி,இறைவனைச் சச்சிதானந்தர் உருக்கமாக வேண்டிக்கொண்டார்...... ஆனால் பல நாட்களாகியும், தன் காதுகள் நன்றுகவே கேட்டதால் இறைவன் தன் கோரிக்கையை நிராகரித்துவிட்டதாகத் தீர்மானித்து, சாத்தியமான வேறு வழியில் தன் நினைவைத்திருப்பினார். நினைத்துப் பார்த்ததில் இனி ஒரே வழிதான் இருப்பாகத்தோன்றியது அவருக்கு

ஏதாவது ஒரு பெண்ணைப் பார்த்து உடனே முடிச்சுப் போட்டுவிட்டால் எல்லாம் சரியாகிவிடும். அதுவும் அவனுடைய சம்மதத்தைக் கேட்காமலேயே செய்ய வேண்டும் என்று முடிவு செய்தார்! ஆனால் மறுநாள் அமைதியாக இருந்து சிந்தித்துப் பார்த்ததில், அவசரத்திலும் ஆத்திரத்திலும் செய்த முடிவாக அது அவருக்குத் தோன்றியது. அதன் பிறகு மண்டையைச் சொரிந்துகொண்டதன் விளைவாக இன்னொரு புதிய யோசனை உதித்தது. படித்துப் பெரிய வேலையிலிருக்கும் நாகரிகம் தெரிந்த பையன், நாம் சொல்கிறபடி நடப்பானு? நாம் பார்க்கும் பெண்ணை வேண்டாம் என்று மறுத்துவிட்டால் என்ன செய்வது? ஆகவே, அவனுடைய சம்மதமும் அவசியம் என்ற வேறு முடிவிற்கு வந்தார். அந்த முடிவு உருவாகிக் கொண்டிருக்கையில், ஒரு புதிய சந்தேகமும் வந்துவிட்டது! அவனுடன் திரிவதாகச் சொல்லப்படும் அந்தப் பெண்ணையே அவன் மணப்பதாகப் பிடிவாதம் செய்தால் என்ன செய்வது?—யோசித்துப் பார்த்தார். அவள் நம்முடைய சாதியாக இருந்துவிட்டால் கவலைப்படத் தேவையில்லை. ஆனல் துரதிருஷ்டவசமாக அவள் வேறு சாதிப் பெண்ணுக இருந்தால்!......

சிவபிரான் கழுத்திலிருக்கும் பாம்பு, இறங்கிவந்து, தன் கழுத்தை இறுக்கிச் சுற்றிக்கொண்டதுடன், அதன் தலையையும் தன் வாயில் நுழைக்க வந்தால் எவ்வளவு திகிலும் திணறலும் தவிப்பும் ஏற்படுமோ, அவ்வளவையும் அந்த ஒரு நொடியில் (அதாவது, வேறு சாதிப் பெண் என்று நினைத்த மாத்திரத்தில்!) அவர் அனுபவித்தார்! பிறகு ஒருவாறு மனந்தேறித் தன் மகனுடைய சம்மதத்தைத் தெரிந்துகொள்ள ஒரு நாள் அவனை அழைத்தார் சச்சிதானந்தர்.

பேச்சு வார்த்தை சுமுகமாகவே தொடங்கியது. "இந்த ஆண்டில் உன் திருமணத்தை நடத்திவிடலாம் என்றிருக்கிறேன். உன் அபிப்பிராயம் என்ன?'' என்று தொடங்கினர். சம்மந்தன் அதை ஆமோதிப்பதுபோல் முகத்தில் வெட்கமும் இளநகையும் தவழ, தலைகுனிந்து அமைதியாக இருந்தான். சச்சிதானந்தருக்கும் பயம் போய் நம்பிக்கை பிறந்தது. அவர் உற்சாகத்துடன், "எனக்குத் தெரிந்த நல்ல இடம் ஒன்று இருக்கிறது'' என்று தொடங்கி முடிப்பதற்குள் சம்மந்தன் குறுக்கிட்டான்: ''அந்தச் சிரமத்தை நான் உங்களுக்கு வைக்கவில்லை'' என்றான். சச்சிதானந்தத்திற்கு மூளையில் தேள் கொட்டியதுபோலிருந்தது! இருந்தும் தன் உணர்ச்சிகளை வெளிக் காட்டிக்கொள்ளாமல் பேசினர். "அதுவும் நல்லதுதான். நீ படித்த பிள்ளை, நம் குடும்ப அந்தஸ்திற்குத் தகுந்தபடி நம் குடும்பத்தில் பெண்கள இருக்கின்றனர். பார்த்துச் சொன்னல் தாராளமாக முடித்துவிடலாம்.''

''நம் குடும்பத்திலேயேதான் பார்க்கவேண்டுமா அப்பா?''

"பார்த்தால் நல்லது. இல்லாவிட்டாலும் குலம் கோத்திரம் பார்த்து நம் சாதியில் — நம் கவுரவத்திற்கு ஏற்றபடி...''

"என்ன சொல்கிறீர்கள்''— என்று குறுக்கிட்டான் சம்மந்தன்.

''ஏன்? புரியவில்லையா?''

''இல்லை ... குடும்பம், குலம், கோத்திரம் என்று மட்டும் சொல்லிவிட்டு, பெண்ணின் குணம், படிப்பு, குடும்பம் நடத்தும் பக்குவம், அடக்கம் — இதைப் பற்றி எல்லாம் ஒரு வார்த்தையும் சொல்லவில்லையே, ஒரு வேளை மறதி...''

''இல்லை, இல்லை. அதெல்லாம் வேண்டாமென்று யார் சொல்லுவார்கள்?''—சற்றுப் பரபரப்படைந்தாலும், வார்த்தையில் நிதானத்தைக் கடைப்பிடித்தார்.

''அப்படியானல் குலம் கோத்திரம் என்றெல்லாம் தேடியலைவதற்கு என்ன அவசியம் இருக்கிறது?''

இந்தக் கட்டத்தில் சச்சிதானந்தருக்கு ஆத்திரத்தை அடக்கும் சக்தி குன்றிவிட்டது! "என்னடா குதர்க்கம் பேசுகிறாய், மடையா!'' குரல் உச்சஸ்தாயியில் ஒலித்தது'..

''என்னப்பா அப்படிச் சொல்லிவிட்டீர்கள்? நீங்கள் மேடைகளில் பேசும்போதெல்லாம் "கலப்புத் திருமணம்'' அது இது என்று புரட்சியாகப் பேசுகிறீர்கள்...

' ஆமாம்! அதற்காக?''

''எந்த வித்தியாசமும் பார்க்காமல் ஒரு பெண்ணை இந்த வீட்டு மருமகளாகக் கொண்டால், அதில் உங்களுக்குத்தானே பெருமை.''

''டேய்! பெருமையும் வேண்டாம்! எருமையும் வேண்டாம்! நான சொல்கிறபடி நீ நடக்கவேண்டும்''— ஆத்திரத்துடன் நாற்காலியிலிருந்து எழுந்தார் சச்சிதானந்தர்! இன்னும் ஏதாவது பேசினல் அவர் அடித்தேவிடுவார் போலிருந்தது! தந்தையின் நிலையை நன்கு புரிந்துகொண்ட சம்மந்தன், தந்திரமான ஒரு முடிவிற்கு வந்தான். அவர் சொல்லுகிறபடி

நடப்பதாக முதலில் ஒப்புக்கொண்டான். ஆனாலும் தன் எதிர்காலத்தை முடிவுசெய்யும் பொறுப்புத்தனக்கும் இருப்பதால், தன் முடிவைத் தெரிவிக்க ஒரு வார அவகாசம் வேண்டும் என்று கேட்டான். சச்சிதானந்தர், தயங்காமல் உடனே ஒப்புக்கொண்டார். "பயலை, இந்த ஒரு வாரத்தில் எப்படியும் தன் வழிக்குக் கொண்டு வந்து விடலாம்" என்ற தந்திரமான நினைப்பினால்தான் அவரும் அவன் கோரிக்கைக்கு இசைந்தார்.

ஆயிற்று. நாட்கள் ஒவ்வொன்றாய்க் காலவெள்ளத்தில் மறைந்து கொண்டிருந்தன. இரவு நேரங்களில் சச்சிதானந்தர் படுக்கையில் உட்கார்ந்தபடி சிந்தித்துக்கொண்டிருப்பார். தூக்கம் பிடிப்பதில்லை. என்ன உபாயத்தால் அவனைத் தன் வழிப்படுத்தமுடியும்? இதுதான் அவர் மனதைச் சதா கலவரப்படுத்திக்கொண்டிருந்த கேள்வி!

இப்பொழுதெல்லாம் அவர் பிரசங்கங்களுக்குப் போவதை வெகுவாகக் குறைத்துக்கொள்ளத் தொடங்கினார். அந்த நினைப்பே அவர் மனதைச்சஞ்சலப்படுத்தும். ஊருக்கு உபதேசம் செய்து அதன் மூலம் சுலபத்தில் புகழும் பெருமையும் சம்பாதிக்கும் பலரை அவர் அறிவார். ஆனால் அவர்களைப் போல் முன் ஜாக்கிரதையாக இருந்திருந்தால், தான் செய்த உபதேசம், தன் தலையிலேயே வந்து விடியும்துர்பாக்கியத்தைத் தவிர்த்திருக்கலாமே என்று அங்கலாய்த்துக் கொண்டது அவர் மனம்.

ஒரு நடிகன், தான் ஏற்று நடிக்கும் பாத்திரத்தின் பண்புகளின்படி சொந்தவாழ்க்கையிலும் ஒழுகுகிறான் என்று எப்படிச் சொல்ல முடியும்? அதுபோல் சமய உபதேசங்களும், சமுகப் புரட்சிக் கருத்துக்களும், அதைச் சொல்பவர்கள் தம் சொந்த வாழ்க்கையில் கடைப்பிடிக்கவேண்டும் என்ற நினைப்பும் தவறானது! புகழுக்கும் பணத்திற்கும் நடிக்கும் நடிகனைப் போல் அவர்களும் தம் உபதேசங்கள் மூலம் புகழ் சேர்த்துக் கொள்ளலாம் என்பதுதான் சச்சிதானந்தரின் 'சித்தாந்தம்!' இந்தச் சித்தாந்த இரகசியத்தை'த்தான்மகன் புரிந்துகொண்டிருப்பான் என்று நம்பியிருந்தார். ஆனால் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டான் அந்தப் 'பாவி!'

சம்மந்தத்தின் முடிவு தெரிவதற்கு இன்னும் மூன்று நாட்கள் எஞ்சியிருந்தன. சச்சிதானந்தர் கவலையின் திருவுருவாய் அமர்ந்திருந்தார். அப்பொழுது எதிர்பாராதவிதமாகசம்மந்தன் உள்ளே நுழைந்தான். களிப்பும் கவலையும் தோன்ற அவனை ஏறிட்டுப் பார்த்தார் அவர்.

அவன் உள்ளே வந்து உட்காரக்கூட இல்லை. வாசலில் நின்றபடி, 'இன்று மாலை, சிவநேசர் உங்களை அவசியம் வந்து பார்க்கும்படி சொன்னார்' என்றான். எந்த இடத்தில், எந்த நேரத்தில் அவர்கள் வழக்கமாகச் சந்திப்பார்கள்என்று சம்மந்தத்திற்குத் தெரியுமாகையால் அதைச்சொல்லாமல் உடனே அங்கிருந்து புறப்பட்டான்.

அன்று மாலை சச்சிதானந்தர் மெரினா கடற்கரையில், குறிப்பிட்ட இடத்தை 'வந்தடைந்தார், தன் குருநாதரைச் சந்திக்க. சிவநேசர் என்றால் அவருக்குக் கடவுளைப் போல! அவ்வளவு நம்பிக்கையும் பக்தியும் அன்பும் சச்சிதானந்தருக்குீ அவரிடத்தில் உண்டு. நான் அவருடைய முக்கிய சீடன் என்று சொல்லிக்கொள்வதிலே மட்டற்ற பெருமைகொள்வார். சமய சமூக அரசியல் துறைகளில் நல்ல தெளிவை ஏற்படுத்தியதுடன், பிரசங்கம் செய்து புகழ் ஈட்டும் பெருமையைத் தேடித் தந்தவர் சிவநேசராகையால் அவரிடத்தில் சச்சிதானந்தம் மிகுந்த பயபக்தியுடன் நடந்துகொண்டதில் வியப்பொன்றுமில்லை.

சரியாக ஐந்து மணிக்குச் சிவநேசர் வந்துசேர்ந்தார்.

"என்ன சச்சி! நீ அழைத்ததாக சம்மந்தன் சொன்னானே, என்ன செய்தி?"

இருவரும் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கையில், அவர்களுக்குச் சமீபத்தில் கார் ஒன்றுவந்து நின்றது. சம்மந்தனும், அவன் காதலிக்கும் அந்தப் பெண்ணும் மணக்கோலத்தில், கையில் மாலைகளுடன் இறங்கினர்!

சச்சிதானந்தருக்குத் தன் கண்களை நம்பமுடியவில்லை; கசக்கிவிட்டுக்கொண்டு உற்றுப்பார்த்தார். விழிகள் நிலைகொள்ளாமல் அலைந்தன! உலகமே கிடுகிடுத்து அடிந்தன் முன்னால் பயங்கர சப்தங்களோடு சரிவதுபோல் இருந்தது! ஆனால் சிவநேசர், புன்முறுவல் அரும்ப அமைதியுடன் அவர்களை வரவேற்றார். அவர்களுடைய காதல் தொடர்பு முன்பே அவருக்குத் தெரியுமென்றாலும், இன்று இந்த எதிர்பாராத 'குரு—சிட' சந்திப்பிறகுச் சம்மந்தன் ஏற்பாடு செய்திருந்த மர்மத்தை இப்பொழுதுதான் அவர் புரிந்து கொண்டார்.

"சச்சிதானந்தம்" — சிவநேசர் அழைத்தார்.

பதில் இல்லை. சச்சிதானந்தரின் உடல் இலேசாக நடுங்கிக்கொண்டிருந்தது.

"என்னுடன் நீ பழகியதும், இதுவரை நீ உபதேசித்ததும் மற்றவர்கள் உன்னைப் பாராட்டிப் பெருமைப்படுத்தவேண்டும் என்ற போலிக் கவுரவத்திற்குத்தானா?"

சச்சிதானந்தர், கண் கலங்க, தலையை உயர்த்தினார். முகத்தில் வியர்வை முத்துமுத்தாய் அரும்பி வழிந்தன. பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

"எல்லா விஷயங்களும் எனக்குத் தெரியும். இதில் மனக்கலத்திற்கே இடமில்லை. உன் நிலைக்கு இது பெரிய ஒரு சோதனைதான். நீ இதில் வெற்றி அடைந்தால் உன் பெருமை இன்னும் பன்மடங்காகும்" என்றார்.

சச்சிதானந்தர், கண்ணைத் துடைத்துக்கொண்டு, "உங்கள் சொல்லை நான் என்றும் தட்டி நடந்ததில்லை. என்ன செய்யட்டும், சொல்லுங்கள்" என்றார்.

"இவர்களை உன் மனப்பூர்வமாக ஆசிர்வதிப்பாயா?"

மெள்ள சச்சிதானந்தரின் தலை அசைந்தது. அதற்காகவே காத்திருந்தவர்களைப்போல் அவனும் அவளும் அவர் கால்களில் விழுந்து வணங்கினார்கள்.

சிவநேசர், மாலைகளைச் சச்சிதானந்தரிடம் தர, அவர் தன் மகனிடம் நீட்ட, சம்மந்தனும் அவன் துணைவியும் மாலைகளை மாற்றிக் கொண்டனர். அடுத்த வாரத்தில், ஊரும் சுற்றமும் அறிய அந்த அதிசயப் புரட்சித் திருமணம் கோலாகலத்துடன் நடந்து முடிந்தது

*

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.